Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 20 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :283 ஆவணி 23 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 08 செப்ரெம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## தங்கத்துக்கான வரி நேற்று முதல் இல்லை!

கொழும்பு, செப். 8
தங்கம் மீதான 15 வீத இறக்குமதி வரியையும், இரத்தினம் மற்றும் நகை உற்பத்தியாளர்களின் 14 வீத வருமான வரியையும் நீக்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பணித்துள்

19

# தமிழ்த் தலைவர்களை திருத்தவேண்டிவரும்

## இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர துடுக்குப் பேச்சு



கொழும்பு, செப்ரெம்பர் 8
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் இன்னமும் பிரிவினைவாதக் கொள்கையில் உள்ளனர். அவர்கள் இன்னொரு போருக்குத் தயாராக உள்ளனர். அவர்களுக்கு அவர்களின் பாணியில் தக்க பதிலடி கொடுக்க ராஜபக்ச படைகளாகிய நாமும் தயாராகவே உள்ளோம்.

19

## மூடையுடன் சறுக்கி வீழ்ந்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப்.8
நெல்லியடியில் நாட்டாமை வேலையில் ஈடுபட்டிருந்த ஒருவர் மூடையுடன் கீழே வீழ்ந்து மயக்கமடைந்து உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் நடைபெற்றுள்ளது. துன்னாலை, ராஜாகிராமத்தைச் சேர்ந்த நாகராஜா நரேஸ் (வயது-26) என்பவரே உயிரிழந்துள்ளார்.
கீழே வீழ்ந்து மயக்கமடைந்த அவர் உடனடியாக 1990 அவசர நோயா

19

## விபத்தில் காயமுற்ற குடும்பப் பெண் சாவு

யாழ்ப்பாணம், செப்.8
யாழ்ப்பாணம், கோண்டாவில் பகுதியில் விபத்துக்குள்ளாகி யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த பெண் ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார்.
தெல்லிப்பழை, சூழாம்பதியைச் சேர்ந்த பிரதீபன் சவீனா (வயது 38) எனும் 3 பிள்ளைகளின் தாயே உயிரிழந்துள்ளார்.
இந்த விபத்து கடந்த 21ஆம் திகதி நடந்

19

## பல்கலை. பேரவைக்கு புதிய உறுப்பினர்

யாழ்ப்பாணம், செப்.8
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பேரவையின் உறுப்பினராக த.சிவராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.
முன்னாள் வடக்கு மாகாண ஆளுநரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி சுரேன் ராகவனின் இடத்துக்கே அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
இந்த நியமனக் கடிதம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

19



## 1,379 கிலோ மஞ்சளுடன் மன்னாரில் ஒருவர் கைது

### நீர்கொழும்புக்கு கடத்தியபோது சிக்கினார்

மன்னார், செப். 8
மன்னாரில் ஆயிரத்து 379 கிலோ 970 கிராம் மஞ்சளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். மன்னார் சாந்திபுரம் பிரதான வீதியில் வைத்து நேற்று மாலை சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.
இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக மன்னாருக்கு

19

## 20ஆவது திருத்தத்துக்கு ஐ.ம.சக்தி கடும் எதிர்ப்பு!

### சபையில் எதிர்த்து வாக்களிக்கவும் முடிவு

கொழும்பு, செப்.8
அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்ட மூலத்துக்குகடும்எதிர்ப்பை வெளியிடுவது என்றும், நாடாளுமன்றத்தில் அதற்கு எதிராக வாக்களிப்பது

19


## உயரத்தில் சிக்கிய புறாவை மீட்டெடுத்த கூட்டு முயற்சி!





கொழும்பு, செப்.8
தண்ணீர் தாங்கி ஒன்றில் சிக்கிக்கொண்ட புறா ஒன்றை மீட்பதற்காக பலர் இணைந்து மேற்கொண்ட கூட்டு நடவடிக்கை பெரும் பாராட்டைப் பெற்றுள்ளது.
இவ்வாறான சம்பவம் என்றாலே

19



## எண்ணெய்க் கப்பலில் மீண்டும் பற்றியது தீ

கொழும்பு, செப்.8
இலங்கைக் கடற்பரப்பில் தீப்பிடித்து பெரும் முயற்சியின் பின்னர் தீ அணைக்கப்பட்ட கச்சா எண்

19

### முச்சந்தி முரளி



உன்னைத் திருத்திக் கொள்
சமூகம் தானாகவே திருந்திவிடும்
என்றொரு பொன்மொழி
இருக்கென்டதை ஆரும்
இவருக்கு சொல்லிவிடுங்கோ

## வெளிவாரி கலைப்பட்ட பதிவுகள் இடைநிறுத்தம்

கொழும்பு, செப்.8
புதிய பாடத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும்வரை வெளிவாரிக் கலைப் பட்டப் படிப்புக்கான புதிய பதிவுகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதன என்று பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.
இது தொடர்பில் பல்

19

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.66,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
செலான் தங்கக் கடன்
011 200 88 88
செலான் வங்கி
Brand Finance Rating "A+" Fitch Rating: "A" (lka)

# வேலையை உறுதிப்படுத்துமாறு சுகாதார உதவியாளர் போராட்டம்

யாழ்ப்பாணம், செப். 8

**வடக்கு மாகாணத்தில் சுகாதாரப்பணி உதவியாளர் தரம்3 பதவி நியமனம் வழங்கப்பட்டவர்கள் தங்களுடைய வேலையை உறுதிப்படுத்தக் கோரி நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**



யாழ்ப்பாணத்தில் உள்ள வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் முன்பாக அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

2019ஆம் ஆண்டு ஒன்பதாம் மாதம் 28ஆம், 29ஆம் திகதிகளில் வடக்கு மாகாண ஆளுநரின் அனுமதிக்கமைவாக, நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் ஆளுநரின் செயலாளரால் 2019ஆம் ஆண்டு 11ஆம் மாதம் 14ஆம் திகதி கடிதம் மூலம் அனுமதி வழங்கப்பட்டதற்கு அமைவாக, வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் 2019ஆம் ஆண்டு 11ஆம் மாதம் 25ஆம் திகதி முதல் சுகாதாரப்பணி உதவியாளர்களாக (கனிஷ்ட) தரம் 3 பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளீர்கள் என்று தமக்கு நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (த-20)

# கூட்டம்

மானிப்பாய்,செப்.8

மானிப்பாய் தெற்கு மேற்கு, விவசாய சம்மேளத்தின் வருடாந்தக் கூட்டம் மற்றும் 2020-2021 காலபோக நெற்செய்கை தொடர்பில் ஆராயும் கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கட்டுடை பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

சண்டிலிப்பாய் கமநலசேவை பெரும்பாக உத்தியோகத்தர் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில், சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சம்மேளத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார். (க)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் மூவர் காயம்

யாழ்ப்பாணம், செப்.8

உரும்பிராய் கோப்பாய் வீதியில் மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் கடும் காயங்களுக்கு உள்ளாகினர். மோட்டார் சைக்கிள்கள் கடுமையாகச் சேதமடைந்தன.



இந்த விபத்து நேற்றுக் காலை 11 மணியளவில் நடந்துள்ளது. விபத்தில் காயமடைந்தவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

விபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-25)





யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்களின் மனிதம் அமைப்பால் இணுவில் இந்துக் கல்லூரியில் நிழல்தரு மரங்கள் நேற்று நடப்பட்டன. அத்துடன் தரம் 2, 3, 4 மாணவர்களுக்கு பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பாவனை தொடர்பான விழிப்புணர்வும் வழங்கப்பட்டது. (எ)


தேவை

வடிவமைப்பாளர்
Graphic designers

Indesign
Adobe photoshop
Corel draw
என்பவற்றில்
வடிவமைப்பு அனுபவம்
கொண்டவர்களுக்கு
உடனடி வாய்ப்பு

IT Administrator

Manage electronic equipment
Install network and computer system
Maintain, repair and upgrade the operating system including hardware and software
Monitor the performance of existing computer systems and IT infrastructures
முன்னனுபவம் விரும்பத்தக்கது

நீங்கள் பொருத்தமானவரா?
சுயவிவரக் கோவையை
உடனே அனுப்புங்கள்.



சுயவிவரக் கோவைகளை அனுப்ப வேண்டிய முகவரி
மனிதவள முகாமையாளர்,
361, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
info@uthayan.com

# எல்லைக் கிராமங்களை சிதைக்கவுள்ள '20'

## கஜேந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டு

**முல்லைத்தீவு, செப். 8**

**நாடாளுமன்றில் 20 ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்படவுள்ளது. இந்த நிலைமையானது ஏற்கனவே தமிழர்களின் எல்லைக் கிராமங்கள் அரச நிர்வாகங்களால் ஒடுக்கப்படுகின்ற நிலைமையை மேலும் மோசமாக்கி விடுமோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.**

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, கொக்குளாய் மக்களுக்கு சொந்தமான விவசாய காணி பிரச்சினைகள் தொடர்பில் அவர் நேற்று பார்வையிட்டார்.

அதன்பின்னர் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மேற்குறித்த பகுதிகளில் உள்ள விவசாய காணிகளின் எல்லைப்பகுதியில் அமைந்துள்ள மக்கள் இன்றும் விவசாயம் செய்யமுடியாமல் தடுக்கப்படுகின்றார்கள்.

மக்களின் பூர்வீக நிலங்கள் திட்டமிட்ட வகையில் சிங்களவர்களால் பறிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களும், சிங்கள இனத்தவர்களுக்கு விவசாய காணிகள் வழங்கப்படும் வருகின்றன.

தமிழர்கள் தத்தம் நிலங்களில் விவசாயம் செய்யமுடியாமல் தொடர்ச்சியாகத் தடுக்கப்பட்டு வருகின்றார்கள், தாக்கப்படுகின்றார்கள், கைதுசெய்யப்படுகின்றார்கள். வேண்டும் என்றே மகாவலி அபிவிருத்தி அதிகார சபையினராலும், வனவளத் திணைக்களத்தினராலும் நீதிமன்றங்களுக்கு இழுக்கப்பட்டு மக்களின் தொழில்கள் முடக்கப்பட்டுள்ளன. போர் முடிந்து பத்து ஆண்டுகள் கடந்து விட்ட நிலையிலும் இந்த மக்களின் விவசாய நிலங்களில் விவசாயம் செய்ய தமிழ் விவசாயிகள் தொடர்ச்சியாக மறுக்கப்பட்டு வருகின்றனர். என்றார். (த-19)

# நட்புறவை வலுப்படுத்த இலங்கை-இந்தியா சந்திப்பு

கொழும்பு, செப். 8

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நட்புறவு மற்றும் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோருக்கிடையில் சுகாதார அமைச்சில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போதே இந்த விடயம் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சந்திப்பில் இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் முதற் செயலாளர் மருத்துவர் சுஷில் குமார், உயர்ஸ்தானிகராலயத்தின் பொருளாதாரம் மற்றும் வணிகப் பிரிவின் அதிகாரி மருத்துவர் ராகேஷ் பாண்டே உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

# ஓட்டோ - பஸ் மோதல் முதியவர் காயம்

வவுனியா, செப். 8

மூன்று சக்கரவண்டியில் பயணித்த முள்ளந்தண்டுபாதிக்கப்பட்ட முதியவர் வீதியைக் கடக்க முற்பட்டபோது தனியார் பேருந்து மோதியதில் காயமடைந்தார் என்று பொலிஸார்தெரிவித்தனர்.

சம்பவம் வவுனியாவில் நேற்று மதியம் பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்றது. காயமடைந்த அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

வவுனியா ஈச்சங்குளம் கருவேப்பங்குளம் பகுதியைச்சேர்ந்த இராசையா செல்வராசா (வயது 68) என்பவரே காயமடைந்தார். (த-110)

# ஐ.தே.கவை சஜித்திடம் ஒப்படைத்து விடுங்கள்

*ரணிலிடம் திஸ்ஸ கோரிக்கை*

கொழும்பு, செப்.8

பலமானதொரு அரசியல் கூட்டணியை அமைப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பதவியை சஜித் பிரேமதாசவிடம் ஒப்படைக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளது. மேற்படி கோரிக்கையை ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஐக்கிய தேசியக் கட்சியை மீளக் கட்டியெழுப்ப வேண்டும். அக்கட்சியின் தலைமைப் பதவியை சஜித் பிரேமதாசவிடம் ஒப்படைக்குமாறு தலைமைத்துவத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம். ஒன்றாகப் பயணிப்பதற்கான காலம் உதயமாகியுள்ளது. அரசாங்கத்துக்கு எதிரான அனைத்து சக்திகளையும் ஒன்றிணைத்து பலமான கூட்டணியை அமைக்க வேண்டும். அந்த கூட்டணிக்கு எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் சஜித் தலைமைத்துவம் வழங்குவார் - என்றார். (ப-44)

# கசிப்பு வைத்திருந்தவர் ஜெயபுரத்தில் கைது

கிளிநொச்சி, செப். 8

கசிப்பு போதைப் பானத்தை உடமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் ஜெயபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஜெயபுரம் தெற்கு பகுதியில் கசிப்பு விற்பனை இடம்பெறுவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்று முன்தினம் அங்கு நடத்திய சோதனையில் 4.5 போத்தல் கசிப்பு மீட்கப்பட்டது. அதை உடமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார். (த-6)

# ராஜிதவுக்கு அழைப்பாணை

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன உட்பட மூவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

ஒக்ரோபர் மாதம் 29 ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.


2014 ஆம் ஆண்டு கொழும்பு முகத்துவாரம் மீன்பிடித் துறைமுகத்தை குத்தகைக்கு விட்டு, அரசுக்கு நட்டம் ஏற்படுத்தியமை தொடர்பான வழக்கு விசாரணைகளுக்காகவே அவர்களுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. (க-இ)

# சாவகச்சேரியில் தென்னை தின விழா

கொடிகாமம், செப். 8

தென்னை தின விழாவும் கற்பகதரு சங்கங்களின் ஒன்றுகூடல் நிகழ்வும் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு சாவகச்சேரி டச்சு வீதியில் அமைந்துள்ள ஐங்கரன் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் சங்கத் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் சங்கத்தின் இளம் சந்ததியினரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (த-159)



# ஒரு வருட பூர்த்தியில் கேக் வெட்டிய பட்டதாரிகள்

*மாணவர்களுக்கு உதவியும் வழங்கினர்*

தெல்லிப்பழை, செப். 8

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் கடந்த வருடம் பயிலுநர்களாக இணைந்த பட்டதாரிகள், ஒரு வருட பூர்த்தியான நேற்று கேக் வெட்டி கொண்டாடினர்.

அதன்போது பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த 90 மாணவர்களுக்கு தமது செலவில் மழை அங்கிகளை அன்பளிப்பாக வழங்கினர் என்று தெரிவிக்கப்பட்டது.

பிரதேச செயலர் ச.சிவசிறி தலைமையில் அவர்கள் கேக் வெட்டி கொண்டாடினர். (த9)

# கப்பலில் தீ விபத்தை ஆராய வந்தது மற்றுமொரு குழு

நியூ டயமன்ட் கப்பலில் ஏற்பட்ட தீ விபத்து தொடர்பாக ஆராய்வதற்காக மற்றுமொரு நிபுணர் குழுவினர் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

ஜேர்மனியில் இருந்து தீயணைப்புத் துறையின் விசேட குழுவினரே நேற்று திங்கட்கிழமை நாட்டை வந்தடைந்தனர். மத்தள விமான நிலையம் ஊடாக குறித்த குழுவினர் நேற்று அதிகாலை நாட்டை வந்தடைந்தனர்.

இந்நிலையில் இவர்கள் பி.சி.ஆர். சோதனைகளின் பின்னர் நியூ டயமன்ட் கப்பல் நிறுத்தப்பட்டுள்ள அறுகம்பே பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கப்பலில் எண்ணெய்க் கசிவைக் கட்டுப்படுத்துவது தொடர்பான ஆய்வு நடவடிக்கைகளுக்காக விசேட குழுவினர் கப்பல் நிறுத்தப்பட்டுள்ள பகுதியில் கண்காணிப்பு பயணமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

இலங்கைக்கு கிழக்கே சங்கமன் கண்டி இறங்குதுறையில், 38 கடல் மைல்கள் தொலைவில் இந்த எண்ணெய் தாங்கிக் கப்பல், கடந்த வியாழக்கிழமை காலை 8 மணியளவில் தீ விபத்துக்கு உள்ளாகியது.

கப்பலின் பிரதான இயந்திர அறையில் கொதிகலன் வெடித்ததைத் தொடர்ந்து தீப்பரவல் ஏற்பட்ட நிலையில், இரண்டு நாள்களாக முயற்சித்து தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருந்தது. (த)

செம்மணியில் படுகொலைசெய்யப்பட்ட

# மாணவி கிருசாந்தியின் நினைவுதினம் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், செப். 8

யாழ். செம்மணிப் பகுதியில் படு கொலை செய்யப்பட்ட சுண் டுக்குளி மாணவி குமாரசாமி கிருசாந்தி யின் 24ஆவது ஆண்டு நினைவுதினம் செம்மணி பகுதியில் நேற்று கடைப் பிடிக்கப்பட்டது. நிகழ்வில் செம்மணியில் படுகொலை செய்யப்பட்ட ஏனைய உற வுகளுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.



1996ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 7ஆம் திகதி யாழ். சுண்டுக்குளி கல்லூரி மாணவி கிருஷாந்தி (வயது 18) வீதியால் சென்றுகொண் டிருந்தவேளை செம்மணிப் பகுதி யில் அப்போதிருந்த இராணுவ முகாமில் வழிமறித்த இராணுவத் தினர் கிருஷாந்தியைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தி கழுத்தை நெரித்துப் படுகொலை செய்தனர் என்று தெரிவிக்கப்ப டுகின்றது.

செம்மணி இராணுவ முகாமில் கிரு ஷாந்தியை தடுத்து வைத்திருந் ததை ஊரவர்கள் கண்ணுற்று மாணவியின் தாயாரிடம் கூறிய மையை அடுத்து மாணவியின் தாயா ரான ஆசிரியை குமாரசாமி இராசம்மா (வயது 59), மாணவி யின் சகோதரனும், யாழ். பரியோ வான் கல்லூரி மாணவனுமான குமாரசாமி பிரணவன் (வயது 16) மற்றும் மாணவியின் வீட்டுக்கு அயல் வீட்டில் வசிக்கும் தென்ம ராட்சி பல நோக்கு கூட்டுறவுச் சங் கத்தில் உதவியாளராக கடமையாற் றிய சிதம்பரம் கிருபாமூர்த்தி (வயது- 35) ஆகியோர் மாணவி யைத் தேடிச்சென்று செம்மணி இரா ணுவ முகாமில் விசாரித்த வேளை அவர்கள் மூவரையும் இராணுவத் தினர் படுகொலை செய்தனர் என் றும் கூறப்படுகின்றது. அன்றைய தினம் நள்ளிரவு படுகொலை செய் யப்பட்ட நால்வரின் உடல்களும் செம்மணி பகுதியில் உள்ள வயல் வெளியில் புதைக்கப்பட்டன. இவர்க ளின் நினைவுதினமே நேற்று கடைப் பிடிக்கப்பட்டது. (ம-20,106)



எஸ்.வி.முருகேசு நிறுவனத்தின் நிதிப் பங்களிப்பில் நிர்மா ணிக்கப்பட்ட கிளி.தருமபுரம் மத்திய கல்லூரி யின் நுழைவாயில் திறப்புவிழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் எஸ்.வி.முருகேசு நிறுவனத்தின் பிரதிநிதிகள், வலயக் கல்வி பணிமனையின் கண்டா வளை பிரதிநிதி உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர். (ந-113)



## அநாதரவாக நின்றிருந்த பிக்கப் வாகனம் பொலிஸில்

வவுனியா, செப்.8

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் காலை அநாதரவாக நின்ற பிக்கப் ரக வாகனம் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

பாலமோட்டை - ஈச்சங்குளம் பிரதான வீதியின் காட் டுப்பகுதியில் பல மணி நேரமாக பிக்கப் ரக வாகனம் அநாதரவாக நிற்பதாக பொதுமகனொருவர் ஓமந் தைப் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப்பிரிவு பொறுப் பதிகாரி சுகுமார் சுகந்துக்குத் தகவல் வழங்கியிருந் தார்.

குறித்த தகவலின் அடிப்படையில் மேற்படி இடத்திற்கு குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர், அப் பகுதியில் சோதனை மேற்கொண்டதுடன் பிக்கப் வாகனத்தை ஓமந்தை பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

மரம் கடத்தலுக்கு இவ் வாகனத்தைப் பயன்படுத்தியி ருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ள ஓமந்தைப் பொலிஸார் வாகனத்தின் உரிமையாளரை அறிவதற் குரிய நடவடிக்கையை மேற்கொண்டுள்ளோம் எனவும் தெரிவித்துள்ளனர். (ந-18)

## நாடாளுமன்றுக்கு வருகின்றார் தூக்குத்தண்டனை குற்றவாளி!

பிரேமலாலுக்கு மன்று அனுமதி

கொழும்பு, செப். 7

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர, நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜெயசேகரவை, நாடாளுமன்றம் செல்ல அனுமதிப்பதா இல்லையா? என்பது தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அறிவிப்பதாக தெரி வித்திருந்த நிலையிலேயே குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கஹவத்தை பகுதியில் 2015ஆம் ஆண்டு தேர்தல் பரப்புரைப் பேரணி இடம்பெற்றபோது, ஒருவரை சுட்டுக் கொலை செய்தமையில் பிரேமலால் முக்கிய குற்றவாளியாகக் குறிப்பிடப்பட் டிருந்தார்.

அவர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்ட தையடுத்தே அவருக்குத் தூக்குத் தண் டனை விதிக்கப்பட்டது. (ம-இ)

## கைதிகளை தனிமைப்படுத்த போகம்பரை சிறைக்கட்டடம்

கொழும்பு, செப். 7

விளக்கமறியல் கைதிகளின் தனி மைப்படுத்தலுக்காக கண்டியில் அமைந் துள்ள பழைய போகம்பரை சிறைச் ச்சாலை கட்டடத்தை பயன்படுத்த சிறைச் சாலைத் திணைக் களம் முடிவுசெய் துள்ளது.

அதன்படி, கொழும்பு மற்றும் மத்திய மாகாணத்தில் உள்ள சிறைகளுக்கு அனுப்பப்படும் கைதிகள் சிறையில் அடைக்கப்படுவதற்கு முன்பு இந்த மையத் தில் தடுத்து வைக்கப் படுவார்கள் என்று எதிர்பார்க்கப்ப டுகிறது.

தற்போது சுமார் 500 கைதிகள் தனிமைப்படுத்தலில் உள்ளனர். அந்த எண்ணிக்கையை ஆயிரமாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் சிறைச்சாலைத் திணைக்களம் தெரி வித்துள்ளது. (ம-இ)



வவுனியா – கொழும்பு

## தனியார் சொகுசு பஸ் விபத்து: 10க்கு மேற்பட்டோர் காயம்

வவுனியா, செப். 8

வவுனியாவிருந்து கொழும்பு நோக்கி நேற்று மதியம் பயணித்த சொகுசு பஸ் சாலியவேவா பகு தியில் விபத்துக்குள்ளானதில் 10க்கும் மேற்பட்ட பயணிகள் காயமடைந்தனர். வவுனியா பண் டாரிக்குளம் பகுதியில் அமைந் துள்ள தனியார் நிறுவனத்திற்கு சொந்தமான பயணிகள் சொகுசு பஸ் வவுனியா புதிய பஸ்நிலை யத்திலிருந்து கொழும்பு நோக்கி நேற்றுமுன்தினம் மதியம் பய



ணத்தை ஆரம்பித்தது. அனுராதபுரம் புத்தளம் பாதையூ டாக கொழும்பு நோக்கி பயணித் துக்கொண்டிருந்த சமயத்தில் நேற்று மாலை 4.30 மணியள வில் சாலியவெவ பாடசாலைக்கு அருகே பஸ் சாரதியின் கட்டுப்பாட் டையிழந்து விபத்துக்குள்ளானது. இதில் 10க்கும் மேற்பட்ட பயணிகள் காயமடைந்தனர். மழை காரணமாக விபத்து இடம்பெற்றது என்று தெரி விக்கப்பட்டது. (ம-18)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இளையோரைப் பார்த்து திருந்துவார்களா?

‘சிறுபிள்ளை வேளாண்மை வீடுவந்து சேராது’ என்பார்கள். சிறுபிள்ளைகளிடம் அனுபவ முதிர்ச்சியென்பது இருக்காது. எதனை எதன்கண் செய்ய வேண்டுமென்ற பக்குவமும் இருப்பதில்லை. அதனால் சிறுவர்களால் செய்யப்படும் எந்தவொரு காரியமும் உருப்படியாக நடக்காது என்பதே இதன் அர்த்தம். ஆனால் வடக்கு மாகாண அரசியலுக்கும் இந்தச் சொற்றொடருக்கும் இம்மியளவும் தொடர்பில்லை போலும். இங்கே மூத்தோரின் முயற்சிகள்தான் அடிக்கடி பொய்த்துப்போகின்றன. மாறாக சிறியவர்களின் முயற்சிகள் ஏதோ ஒரு நம்பிக்கையைத் தருவனவாக அமைகின்றன.

தியாகதீபம் திலீபனின் 33ஆவது நினைவுதினத்தை முன்னிட்டு நடைபவனியொன்று இடம்பெறவுள்ளது. முள்ளிவாய்க்காலில் இருந்து யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள நினைவுத் தூபிவரை இடம்பெறவுள்ள இந்த நடைபவனியை தமிழ்த் தேசியக் கட்சிகளின் இளைஞர் அணிகள் ஒன்றிணைந்து, கட்சி பேதங்களைக் கடந்து ஏற்பாடு செய்துள்ளன. இது தொடர்பாக அறிவிக்கும் ஊடகச் சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட வாலிபர் முன்னணியின் தலைவர் க.பிருந்தாபன், செயலர் சேனாதிராசா கலையமுதன், தமிழ் மக்கள் கூட்டணியின் இளைஞர் அணித் தலைவர் கிருஷ்ணமேனன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் அமைப்பாளரான மணிவண்ணனின் ஆதரவாளர்கள் என்று பலர் இணைந்து இந்தச் செய்தியாளர் சந்திப்பை நடத்தினர். அதில், ‘தமிழ்த் தேசியம் என்று வரும்போது எங்களுக்குள் எவ்விதமான பேதமோ பிரச்சினையோ இல்லை. எதிர்காலத்தில் ஒற்றுமையான பயணத்தை மேற்கொள்வதற்கு இது சிறந்த ஆரம்பப் புள்ளியாக இருக்கும். எனவே மூத்த தலைவர்கள் எங்களைப் பார்த்து திருந்தவேண்டும்’ என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர்கள் அனைவரும் வெட்கித் தலைகுனியும்படியான சாட்டையடி இது. ஏனெனில் தாய்மாரின் கண்ணீரைக்கூட பிரித்தாள்கின்ற அரசியலைத்தான் நாம் வடக்கில் கண்டு வருகின்றோம். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக முன்னெடுக்கப்படும் போராட்டம், முள்ளிவாய்க்கால் நினைவுதினம், மாவீரர் நினைவுதினம், மே தினம் என்று எதிலும் எமது தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒற்றுமையாகச் செயற்பட்டதாக வரலாறு இல்லை. எல்லாவற்றிலும் வாக்கரசியல் நன்மைகளை முன்வைத்து, தனித்தனியாக எல்லாவற்றையும் செய்வதே தமிழ்த் தேசியக் கட்சிகளின் மரபு. எந்தெந்த விடயத்தில் தனித்துச் செயற்பட வேண்டும், எந்தெந்த விடயத்தில் கூட்டாகக் குரலெழுப்ப வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு எள்ளளவுகூடப் புரிதல் கிடையாது.

2009ஆம் ஆண்டு வரையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகச் சமூகம் அனைத்துத் தரப்பினரையும் ஓரணியில் திரட்டுவதில் மிகுந்த கரிசனை காட்டியது. பல சந்தர்ப்பங்களில் அரசியல் கட்சிகளுக்கும், மக்களுக்கும் வழிகாட்டிகளாகவும் பல்கலைக்கழக மாணவர்கள் திகழ்ந்ததோடு, பல அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த முடிவுகளை எடுத்து அதனைத் தமிழ்மக்கள் பின்பற்றவும் வைத்தார்கள். ஆனால் அதன் பின்னர் சிலபல காரணங்களால் பல்கலை மாணவர்களின் சொல்லுக்கும், செயலுக்கும் மக்களிடையே வரவேற்பில்லாமல் போனது. அவர்களது நீர்த்துப்போன செயற்பாடுகள், பல்கலை மாணவர்களின் சொற்களை செல்லாக்காசாகியுள்ளன.

அந்த வகையில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் இளைஞர் அணியினர் மேற்கொண்டுள்ள இந்த முயற்சியை தமிழ் மக்கள் பெரிதும் பாராட்டுகின்றனர். அவர்களின் செயற்பாடுகள் என்னென்றும் ஐக்கியத்தோடு தொடரவேண்டும் என்பதே அனைவரதும் பேரவா. முழுநேர அரசியல் நீரோட்டத்தில் இறங்கிய பின்னர், கொள்கைகள் என்ற சப்பைக்கட்டுக்குள் குழுக்களாகப் பிரிந்து ‘இன ஒற்றுமை’ என்பதன் மாண்பை அவர்கள் தொலைத்துவிடல் ஆகாது என்பதே இளைஞர் மீது தற்போதுள்ள எதிர்பார்ப்பு. இந்த இளையோரைப் பார்த்தாவது பழுத்த, பதவிக் கதிரையில் தொங்கிக் கொண்டிருக்கும் மூத்த அரசியல்வாதிகள் ஒன்றுபடமாட்டார்களா எனத் தமிழ் மக்கள் ஏங்குகின்றனர். **அவர்களின் ஏக்கம் வெறும் கானலாகவே நீளுமா, இல்லையேல் இளையோரின் பாதையைப் பின்பற்றி மூத்தவர்களும் ஒன்றாகக் கரம் கோர்த்து இனத்தின் நன்மையை முதன்மைப்படுத்துவார்களா என்ற கேள்விக்கெல்லாம் காலத்தை தவிர வேறு யாரும் பதில் சொல்லவே முடியாது.**

*மூவாயிரம் ஏக்கர்*

# தனியார் காணிகள் படையினர் வசம்

## யாழ். மாவட்டச் செயலகம் தகவல்

**யாழ்ப்பாணம்,செப்.8**

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சுமார் 3 ஆயிரத்து 27.85 ஏக்கர் தனியார் காணிகள், பாதுகாப்புத் தரப்பினரிடம் உள்ளன என்று மாவட்டச் செயலக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.**

2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 23 ஆயிரத்து 850. 72 ஏக்கர் தனியார் காணிகள் பாதுகாப்புத் தரப்பினரால் கையகப்படுத்தப் பட்டிருந்தன.

2014 ஆம் ஆண்டு 16 ஆயிரத்து 775.50 ஏக்க ராகவும், 2015 ஆம் ஆண்டு 7 ஆயிரத்து 75.22 ஏக்கராகவும், 2019 ஆம் ஆண்டு 4 ஆயிரத்து 47 .37 ஏக்கராகவும் குறைவடைந் தன.

தற்போது சுமார் 3 ஆயிரத்து 27.85 ஏக்கர் தனியார் காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

நெடுந்தீவில் 21.91 ஏக்கரும், வேலணையில் 54.59 ஏக்கரும், ஊர்காவற்றுறையில் 2.37 ஏக்கரும், காரைநகரில் 32.50 ஏக்கரும், யாழ்ப்பாணத்தில் ஓர் ஏக்கரும், நல்லூரில் 4.85 ஏக்கரும், சண்டிலிப்பாயில் 26.53 ஏக்கரும், சங்கானையில் 23.68 ஏக்கரும், உடுவிலில் 0.71 ஏக்கரும், தெல்லிப்பழையில் 2 ஆயிரத்து 480.15 ஏக்கரும், கோப்பாயில் 9.61 ஏக்கரும், சாவகச்சேரியில் 70.88 ஏக்கரும், கரவெட்டியில் 4.49 ஏக்கரும், பருத்தித்துறையில் 9.39 ஏக்கரும், மருதங்கேணியில் 285. 20 ஏக்கரும் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

இவற்றில் இராணுவத்தினர் 2 ஆயிரத்து 54 .25 ஏக்கரையும், கடற்படையினர் 274.57 ஏக்கரையும், விமானப்படையினர் 646.50 ஏக்கரையும், பொலிஸார் 52.53 ஏக்கரையும் கையகப்படுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (க-159)



## ஊவா மாகாணத்தின் ஆளுநர் கடமையேற்பு

ஊவா மாகாணத்தின் புதிய ஆளுநராக ஏ.ஜே.எம். முஷாமில், ஆளுநர் காரியாலயத்தில் தனது கடமைகளை மத வழிபாடுகளுடன் நேற்றுப் பொறுப்பேற்றார்.

வட மேல் மாகாண ஆளுநராகக் கடமையாற்றிய இவர், ஊவா மாகாணத்தின் ஆளுநராக கடந்த சில நாள்களுக்கு முன்பு, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

இந்த நிலையில் நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். நிகழ்வில் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சர்வமதத் தலைவர்கள், மற்றும் இராணுவத்தினர், பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (க)

## காலநிலையால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு நஷ்டஈடு

கொழும்பு,செப்.8

சீரற்ற காலநிலை காரணமாக நாட்டில் 21 மாவட்டங்களில் ஆயிரத்துக்கும் அதிகமான வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பாதிக்கப்பட்ட வீடுகளின் உரிமையாளர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்காக ஒரு கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மூன்று மாவட்டங்களுக்கு துரித நிவாரணம் வழங்குவதற்க்க 15 இலட்சம் ரூபாவை அரசு வழங்கியுள்ளது என்று தேசிய அனர்த்த நிவாரண சேவை மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் சாவித்திரி ஜயக்கொடி தெரிவித்துள்ளார். (க-இ)

## பயங்கரவாதிகளுக்கு புனர்வாழ்வளித்தோம்

### மஹிந்த பெருமிதம்

கொழும்பு,செப்.8

மனித உரிமைகளைப் பாதுகாத்து, உலகின் மிக மோசமான பயங்கரவாதிகளுக்குப் புனர்வாழ்வளித்த நாடு என்ற வகையில் இலங்கைக்கு உலக மத்தியில் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. இதற்கு சந்திரசிறி கஜதீரவின் அரசியல் அறிவு மற்றும் நற்பண்பு என்பன காரணங்களாக அமைந்தது.

இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

**சந்திரசிறி கஜதீரவின் ஆண்டு நினைவு விழாவில் அவர் இதனைத் தெரிவித்தார் என்று ஊடகப் பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.**

**அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: “போர் நிறைவடையும் காலத்தில் சந்திரசிறி** கஜதீர சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சராகச் சேவையாற்றினார்.

சுமார் 13 ஆயிரம் தமிழீழ விடுலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் புனர்வாழ்வு பெறுவதற்காக அவரிடம் சரணடைந்தனர். அவர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு எவ்வித பிரச்சினைகளும் இன்றி விடுவிக்கப்பட்டனர்.

அரசியலுக்குப் புலமை மற்றும் சிறந்த பண்பு அவசியம் என்பதை சந்திரசிறி கஜதீரவிடமிருந்து, இன்றைய அரசியல் உலகில் உள்ளவர்கள் விளங்கிக்கொள்ள வேண்டுமம்” என்று பிரதமர் தெரிவித்தார்.

**நிகழ்வில் அமைச்சர் டளஸ் அழகப்பெரும, இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர, நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் - என்றுள்ளது. (க)**

# வடக்கில் கணினிமயமாகிறது விவசாய முயற்சியாளர் விவரம்

யாழ்ப்பாணம்,செப்.8

**வடக்கு மாகாணத்தில் விவசாய வியாபார தொழில் முயற்சியாளர்களை வலுவூட்டும் நோக்கில் அவர்களின் விவரங்கள் கணினி மயப்படுத்தப்படவுள்ளன.**

விவசாய வியாபார தொழில் முயற்சியாளர்களின் உற்பத்தி, பெறுமதிசேர் நடவடிக்கைகள் மற்றும் சந்தைப்படுத்தலின் போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் புதிய தொழில்நுட்ப அனுகூலங்களைப் பெற்றுக் கொடுத்தல் ஆகிய நடவடிக்கைகளுக்காகவே விவரங்கள் கணினி மயப்படுத்தப்படவுள்ளன.

இவ்வாறான தரவுத்தளத்தை பேணுவதனூடாக வட மாகாணத்திலுள்ள விவசாய தொழில்முயற்சியாளர்களின் உற்பத்திகளை தரமுயர்த்தவும் பெறுமதிசேர் பொருள்களை மெருகூட்டவும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சந்தை வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள விவசாய வியாபார தொழில் முயற்சியாளர்கள் தங்கள் மாவட்டங்களிலுள்ள பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகங்கள் மற்றும் விவசாய அமைச்சில் நேரடியாக விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விவரங்களைப் பதிவு செய்து எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களுக்கு அமைச்சின் பிரதித் திட்டமிடல் பணிப்பாளரின் 0212217357 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டது. (ஐ)

# வல்லிபுர ஆழ்வார் திருவிழாவில் சுகாதார நடைமுறைகள் கட்டாயம்

### பிரதேச செயலர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், செப். 8

வரலாற்றுப் பிரசித்திபெற்ற வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் மகோற்சவ காலத்தில் பக்தர்கள் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார நடைமுறைகள் தொடர்பில் பருத்தித்துறை பிரதேச செயலர் அறிவுறுத்தல்களை விடுத்துள்ளார். நாட்டில் கொரோனாத் தொற்று அபாய நிலை நிலவும் சூழலில் பின்வரும் நடைமுறைகள் கட்டாயம் பின்பற்றப்படவேண்டும் என்று பிரதேசசெயலர் ஆ.சிறி கேட்டுள்ளார். அவர் அனுப்பிய ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

1. சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தலின் பிரகாரம் 350 அடியார்களே உரிய நேரத்தில் வழிபாடு செய்வதற்கு அனுமதிக்கப்படுவர்.

அடியவர்கள் கோவிலுக்கு வருகைதரும்போது தேசிய அடையாள அட்டை அல்லது அடையாளத்தை உறுதி செய்யும் ஆவணம் ஏதாவது ஒன்றை ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக கண்டிப்பாக உடன் எடுத்து வரவேண்டும். அவற்றில் ஏதாவது ஒன்று வீதித் தடையில் ஒவ்வொரு தடவையும் பதிவு செய்யப்பட்டே உட்செல்ல அனுமதிக்கப்படுவர்.

3. வீதித் தடைகளூடாக ஆலயத்துக்கு வருகை தரும் அடியவர்கள் எப்போதும் முகக்கவசம் அணிந்திருத்தல் கட்டாயமானதாகும்.

4. கோவிலுக்குள் உள் நுழைவதற்கு முன்னர் கைகளை சுத்தம் செய்ய வேண்டும்.

5. கோவிலுக்கு உள்ளேயும் வெளியேயும் தனியாள் இடைவெளியைப் பின்பற்றி வழிபாடுகளை மேற்கொள்ளுதல் ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும்.

6. அடியவர்கள் ஆசார சீலர்களாக கோவிலுக்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

7. அடியவர்கள் கோவிலில நீண்ட நேரம் தரித்து நிற்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

8. கொரோனாத் தொற்று பாதிப்பு காரணமாக சுயதனிமைப்படுத்தல் அல்லது கட்டாய தனிமைப்படுத்தலுக்கு ஏற்கனவே உட்படுத்தப்பட்டு காலம் முடிவுற்ற பின்னர் அடியவர்கள் கோவிலுக்கு வருகை தரும் பட்சத்தில் தனிமைப்படுத்தல் முடிவுற்ற காலத்தில் வழங்கப்பட்ட மருத்துவ சான்றிதழ்களை தம் முடன் கொண்டுவருதல் வேண்டும். முக்கியமாக வெளிநாடுகளில் இருந்து வருகை தந்தவர்கள் தனிமைப்படுத்தல் மருத்துவ சான்றிதழ்களை எப்போதும் தம்வசம் வைத்திருக்க வேண்டும்.

9. வயோதிபர்கள், நோயாளர்கள், சிறு குழந்தைகள் தங்கள் தனியாள் சுகாதார நலன் கருதி கோவிலுக்கு வருகை தருவதை இயன்றவரை தவிர்த்தல் நன்று.

10. கொவிட் 19 அறிகுறிகள் (காய்ச்சல், தடிமன், தும்மல், இருமல் போன்றவை) காணப்படுபவர்கள் கோவிலுக்கு வருகை தருவதை தவிர்ப்பது நன்று.

11. கோவில் சுற்றாடலில் வீதிகளில் மண்டகப்படிவைத்தல், பிரசாதம் வைத்தல், தாக சாந்தி, வழங்கல் போன்றவை முற்றாக தடை செய்யப்பட்டுள்ளன.

12. அங்கபிரதட்சணம் செய்தல், அடி அழித்தல், கற்பூரச் சட்டி எடுத்தல், காவடி, தூக்கு காவடி எடுத்தல் போன்ற நேர்த்திக் கடன்களின் போது கொரோனா கட்டுப்பாடு தொடர்பான சுகாதார நடைமுறைகளை முறையாக கடைப்பிடிக்க முடியாத சூழல் ஏற்படுவதால் இந்தவருடம் மேற்படி நேர்த்திக் கடன்களை கோவில் வளாகத்திலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் மேற்கொள்ளுதல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

13. கோவில் சுற்றாடல் மற்றும் ஆலயத்தை அண்டிய பகுதியில் அடியார்கள் மற்றும் பொதுமக்கள் கூடுவதற்கான தெய்வீக சொற்பொழிவுகள், தெய்வீக இசை அரங்குகள், கலை நிகழ்வுகள் மற்றும் பொழுதுபோக்குக்கான அனைத்து நிகழ்வுகளும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

14. ஏற்கனவே கோவில் சூழலில் நிரந்தரமாக இயங்கிவந்த கடைகள் மாத்திரம் தொடர்ந்தும் இயங்கி வருவதற்கு அனுமதிக்கப்படும். எனினும் இயங்கி வரும் வியாபார நிலையங்களை விரிவாக்க அனுமதி இல்லை.

15. கோவில் சூழலிலுள்ள வெற்றுகாணிகளிலோ அல்லது கட்டாங்களிலோ புதிய கடைகள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. நடமாடும் வியாபாரமும் அனுமதிக்கப்படமாட்டாது.

16. திருவிழாவின்போது கோவில் சுற்றாடலில் சுகாதார நடைமுறைகளை முறையாகப் பின்பற்றத் தவறும் பட்சத்தில் அல்லது மீறுபவர்கள் மீது சுகாதார நடைமுறைகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

17. சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காமை, மீறுகின்றமை போன்றனவற்றால் ஏற்படக்கூடிய அசௌகரியங்களை கருத்திற்கொண்டு அனைவரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். சுகாதார அமைச்சினால் காலத்துக்கு காலம் வெளியிடப்படும் சுகாதார சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் அத்துடன் யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரியால் கூறப்பட்ட சுகாதார நடைமுறைகளை கருத்திற்கொண்டு மேற்கூறப்பட்ட அறிவுறுத்தல்களை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் மகோற்சவ காலங்களில் ஆலய சுற்றாடல்களில் அடியார்களை இறுக்கமாகக் கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். என்றுள்ளது. (து)

# ஜனநாயகம் பறிக்கப்படும்

### உபுல் குமாரப்பெரும எச்சரிக்கை

கொழும்பு, செப்.8

20ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் ஊடாக நாட்டில் ஜனநாயக சந்தர்ப்பம் இல்லாமல் போகும் என சட்டத்தரணி உபுல் குமாரப்பெரும தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

சட்டத்தில் அமுல்படுத்தப்படும் சர்வாதிகார முறையை நோக்கிய யோசனைகள் 20ஆவது திருத்தச் சட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன. இதனால், 20ஆவது திருத்தச் சட்டம் குறித்து மக்கள் மிகவும் புத்திசாலித்தனமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஜனாதிபதி நிறைவேற்றுச் செயற்பாடுகளுக்கு எதிராக வழக்குத் தொடரக்கூடிய ஏற்பாடுகள் 19ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் கொண்டு வரப்பட்டன. 20ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் 78ஆம் ஆண்டு அரசமைப்புச் சட்டத்தைப் போன்று மக்களுக்கு வழங்கப்பட்ட உரிமை பறிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மற்றும் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம் மாத்திரம் 20ஆவது சட்டத்தை நிறைவேற்ற முடியாது என நான் நம்புகிறேன். இதனை நிறைவேற்ற சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டும் - என்றார். (ப-இ)

# நாடாளுமன்று செல்லும் திட்டம் தற்போதில்லை

### பஸில் கூறுகிறார்

கொழும்பு, செப்.8

தற்போதைக்கு நாடாளுமன்றம் செல்லப்போவதில்லை, அதற்கான எந்தத் திட்டமும் இப்போது இல்லை என்று பஸில் ராஜபக் ஷ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நான் தற்போது உள்ள நிலை குறித்து எனக்கு மகிழ்ச்சியும் திருப்தியும் காணப்படுகின்றது. நாடாளுமன்றம் செல்வதற்கான உடனடித் திட்டங்கள் எதுவுமில்லை. 19ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டவேளை பொதுஜனபெரமுனவின் உறுப்பினர்கள் அதற்கு ஒரு போதும் ஆதரவளிக்கவில்லை என்றார். அத்தோடு 20ஆவது திருத்தத்தின் மூலம் ஜனாதிபதிக்கு அதிகளவு அதிகாரங்கள் வழங்கப்படுகின்றமையும் அவர் நியாயப்படுத்தினார். (ப-இ)



முல்லைத்தீவின் எல்லைக் கிராம விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் நேரில் சென்று ஆராய்ந்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத் தொடுவாய்ப் பகுதியில் வசிக்கும் மக்களின் பூர்வீக விவசாயக் காணிகளில் அவர்கள் விவசாயம் மேற்கொள்ள பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள், படையினர், வனவள திணைக்களத்தினர், மகாவலி அபிவிருத்தி அதிகார சபையினர் தடைகளை ஏற்படுத்தி வருகின்றனர் என மக்கள் குற்றஞ்சாட்டிய நிலையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் அது தொடர்பில் நேரில்சென்று ஆராய்ந்தார். (ப-19)

# விபத்தில் சிக்கியது இழுவைப் படகு


### கரை வந்தனர் மீனவர்

வெலிகம கப்பரதொட பிரதேசத்தில் மீன்பிடிப்ப தற்காகச் சென்றிருந்த மீன்பிடி இழுவைப் படகொன்றுவிபத்துக்குள்ளாகியுள்ளது. இதில் சென்றிருந்த மீனவர்கள் நேற்று முன்தினம் இரவு கரையை வந்தடைந்தனர் என்று மீன்பிடி மற்றும் நீர்வளத்துறைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சீற்ற வானிலை காரணமாக கடற்றொழிலில் ஈடுபடுவோருக்கு எச்சரிக்கை விடுத்திருந்த போதிலும் குறித்த தரப்பினர் கடலுக்குச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. 20 முதல் 40 வயதுக்கு இடைப்பட்ட 5 மீனவர்களே இவ்வாறு படகில் சென்றிருந்தனர். (ப-இ)

# செட்டிகுளம் மருத்துவமனைக்கு இரண்டு மருத்துவர்கள் நியமனம்

வவுனியா,செப்.8
செட்டிகுளம் ஆதார மருத்துவமனைக்கு இரண்டு மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
மருத்துவர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு கோரி, மக்களால் கடந்த வாரம் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.
இதனையடுத்து வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் தற்காலிகமாக இரண்டு மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் நேற்றுத் திங்கட்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றனர்.
மத்திய அரசால் நிரந்தர நியமனம் வழங்கப்படும் வரை, இவர்கள் கடமையில் இருப்பர் என்று வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார்.
மக்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது, நாடாளுமன்ற உறுப்பினர் கு. திலீபன், மருத்துவர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தார். அதை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-110)



## குளங்களில் சிரமதானம்

கிளிநொச்சி,செப்.8
காலபோக நெற் பயிர்ச்செய்கைக்கான காலம் நெருங்குவதால், கிளிநொச்சியில் குளங்கள் மற்றும் ஆறுகள் சிரமதானம் மூலம் சீர்செய்யப்பட்டு வருகின்றன.
கலவெட்டித்திடல் புளியம்பொக்கணை கமக்கார அமைப்பின் ஒழுங்குபடுத்தலின் கீழ், கமக்கார அமைப்புக்கு உட்பட்ட குளங்கள் மற்றும் ஆறுகளில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.
அமைப்பின் உறுப்பினர்கள், இளைஞர்கள், விவசாயிகள் என பலர் சிரமதானத்தில் ஈடுபட்டனர். (க-21)

## கரையோர முகாமைத்துவ கலந்துரையாடல்

சாவகச்சேரி,செப்.8
சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கரையோர மற்றும் துறைமுகங்களின் முகாமைத்துவத்தில் குழு நிறுவுதல் தொடர்பாக, பொன் விழா மண்டபத்தில் நேற்றுக் கலந்துரையாடல் இடம்பெற்றது.
கரையோர வலய முகாமைத்துவத்தில் குழு அமைப்பதன் அவசியம் மற்றும் கடல்சார் சூழல் பாதுகாப்பு தொடர்பாக அதிகாரிகளால் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.
பிரதேசத்தில் கரையோர வலயத்தில் கழிவு முகாமைத்துவம் தொடர்பான சட்டங்களை அமுல்படுத்தல் தொடர்பிலும் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது. (க-9)

# சவால்களை முறியடித்து '20'ஐ நிறைவேற்றுவோம்!

### சர்வஜன வாக்கெடுப்புக்கான தேவை ஏற்படாது என்கிறார் பீரிஸ்

கொழும்பு, செப்.8
அரசமைப்பின் '20' ஆவது திருத்தச் சட்டமூலத்தை எதிர்க்கட்சிகள் சவாலுக்குட்படுத்தினாலும் அதனை எதிர்கொள்வதற்கு அரசாங்கம் தயாராகவே இருக்கின்றது என்று அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.



கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் வேண்டும் என சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார். எனவே, மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெறுவதில் எமக்கு எவ்வித சிக்கலும் ஏற்படாது. எனவே, சர்வஜன வாக்கெடுப்பு தேவையில்லை என்பது உறுதியானதொன்று. உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யும் உரிமை அனைவருக்கும் இருக்கின்றது. அந்த அடிப்படையில் எதிரணிகள் தாக்கல் செய்யலாம். அவ்வாறு தாக்கல் செய்வதும் நல்லதுதான், ஏனெனில் குறித்த சட்டமூலம் அரசமைப்புக்கு முரணானது அல்ல என்பது உறுதியாகும். அதேவேளை, தனி நபர்களை இலக்கு வைத்து '20' ஆவது திருத்தச்சட்டமூலம் கொண்டுவரப்படவில்லை. ஆனால், ராஜபக்ஷ குடும்பத்தினரை இலக்கு வைத்தே '19' ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டது. அவ்வாறு செயற்பட்டவர்களே '20' ஐயும் அவ்வாறு பார்க்கின்றனர். அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் எனக் கூறப்படுவதெல்லாம் கட்டுக்கதையாகும்- என்றார். (ப-44)

# பாடசாலை வீதிகள் மழையால் சேதம்

### சீரமைக்குமாறு கோரிக்கை

மன்னார், செப் 8
மழையால் சேதமடைந்துள்ள பாடசாலை வீதிகளை விரைவாகச் சீரமைத்துத் தருமாறு மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் ஜே.பிரட்லீ வேண்டுகோள் விடுத்துள்ளார்.
கடந்த வாரம் இடம்பெற்ற நானாட்டான் பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டத்தின்போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.
"மன்னார் மாவட்டத்தில் பெய்த கடும் மழை காரணமாக நானாட்டான் பிரதேசத்துக்குட்பட்ட பாடசாலை வீதிகள் பலத்த சேதமடைந்துள்ளன. வஞ்சியன் குளம் வாழ்க்கைப்பெற்றான் கண்டல், ஆத்திக்குளி, மாளிகைப்பிட்டி, செட்டியார் கட்டையடம்பன், போன்ற கிராமத்தில் உள்ள பாடசாலை வீதிகளே இவ்வாறு சேதமடைந்துள்ளன. எனவே அந்த வீதிகளை விரைவாகச் சீரமைத்துத் தருவதன் மூலம் மாணவர்களின் இலகுவான போக்குவரத்தை நிவர்த்தி செய்ய முடியும்" என்று இதன்போது அவர் மேலும் தெரிவித்தார்.
உள்ளக வீதிகள் யாவும் நானாட்டான் பிரதேச சபைக்குச் சொந்தமாக உள்ளமையால் நானாட்டான் பிரதேச சபை குறித்த வீதிகளைச் சீரமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று பிரதேச அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவர்களால் அறிவுறுத்தப்பட்டது. (ஐ-213)

## ஹெரோய்ன் வைத்திருந்தவரை சமூக சேவையில் ஈடுபட பணிப்பு!

சாவகச்சேரி, செப். 8
32 மில்லி கிராம் ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த நபரை சமூக சேவையில் ஈடுபடுத்துமாறு சாவகச்சேரி நீதிமன்றத்தால் நேற்று உத்தரவிடப்பட்டது.
சாவகச்சேரி பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபட்ட வேளையில் நாவற்குழி பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய குறித்த நபரை சோதனையிட்டபோது அவரிடம் 32 மில்லிகிராம் ஹெரோய்ன் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். இதையடுத்தே அவரை சமூக சேவையில் ஈடுபடுமாறு உத்தரவிடப்பட்டது.
அத்துடன் வழக்கு நவம்பர் மாதம் 3ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ம-9)

# ஐ.தே.கவின் 74ஆவது சம்மேளனம் கூடியது

கொழும்பு, செப்.8
ஐக்கிய தேசியக் கட்சியின் 74 ஆவது சம்மேளனம் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுமுன்தினம் சிறிகொத்தாவில் நடைபெற்றது.
நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக வஜிர அபேவர்தன, ருவன் விஜேவர்தன,அர்ஜுன ரணதுங்க,ஜோன் அமரதுங்க, தயா கமகே மற்றும் நவீன் திஸாநாயக்க ஆகியோரும் ஏனைய சில முக்கியஸ்தர்களும் மாத்திரமே பங்குபற்றியிருந்தனர்.
நிகழ்வுகள் நிறைவடைந்ததன் பின்னர் ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதில்களும் வழங்கப்பட்டன.
"கட்சியின் எதிர்காலம் குறித்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் தேர்தல் தோல்வி தாக்கம் செலுத்தாது" என்று வஜிர அபேவர்தன தெரிவித்தார். "கட்சியின் தலைமைத்துவத்தை ஏற்பதற்கு நான் தயாராகவுள்ளேன்" என்று ருவன் விஜேவர்தன தெரிவித்தார். "கட்சி தீர்மானித்தால், தலைமைத்துவத்தை ஏற்க நான் தயாராகவுள்ளேன். எனினும் முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய குறுகிய காலத்திற்கு கட்சித் தலைமைத்துவத்தை ஏற்றுச் செயற்பட வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும் என்று அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார். (ப-இ)



## இலங்கை வங்கி ஊழியர்களால் திருமலையில் நேற்று கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், செப். 8
இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் திருகோணமலையில் நேற்றுக் கவனவீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது. நண்பகல் 12 மணி தொடக்கம் 1 மணிவரை இந்தப் போராட்டம் இடம்பெற்றது.
அம்பாறை மாவட்ட பிரதேச முகாமையாளர் தனது கடமையைச் செய்யாமல் தான் சார்ந்த தொழிற்சங்கத்திற்கு ஆதரவாக ஊழியர்களை மாற்ற முயல்கின்றார் என்றும் இது நிறுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்து இந்த கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ம-இ)

# முல்லையில் மருத்துவர் பற்றாக்குறை; வடக்கு ஆளுநருடன் நேற்றுப் பேச்சு

முல்லைத்தீவு, செப்.8

**முல்லைத்தீவு மாஞ்சோலை மருத்துவமனைக்கு மருத்துவர்களை நியமிக்குமாறு சுழற்சி முறையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், அந்தக் குறைபாடுகளை நீக்குவது தொடர்பாக மாஞ்சோலை மருத்துவமனை அபிவிருத்திக் குழுவினர், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் வடக்கு மாகாண ஆளுநரை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர்.**



இதன்போது மருத்துவமனையில் காணப்படும் மருத்துவர் பற்றாக்குறை மற்றும் பல்வேறு குறைபாடுகள் தொடர்பில் ஆளுநரிடம் சுட்டிக்காட்டப்பட்டன.

இதனை செவிமடுத்த ஆளுநர் பிரச்சினைக்கு உரிய தீர்வை விரைவில் பெற்றுத் தருவதாக உறுதியளித்தார் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் நீண்ட காலமாக நிலவும் மருத்துவர் பற்றாக்குறையால், அங்கு வரும் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். உரிய சிகிச்சையைப் பெற்றுக்கொள்வதற்காக நீண்ட நேரம் காத்திருக்கின்றனர். மாவட்டத்தைச் சேர்ந்த மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு, மருத்துவர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக் கோரி மருத்துவமனை அபிவிருத்திக்குழு மற்றும் சமூக அமைப்புகள், மருத்துவமனை நலன்விரும்பிகள் என அனைவரும் கவனவீர்ப்புப் போராட்டம், பணிப்புறக்கணிப்புப் போராட்டங்களை முன்னெடுத்து வந்த நிலையிலும் மருத்துவர்கள் நியமிக்கப்படாதமையால், நேற்றுமுன்தினம் முதல் மருத்துவமனை முன்பாக சுழற்சி முறையில் போராட்டத்தை அவர்கள் ஆரம்பித்தனர். இவ்வாறான நிலையிலேயே நேற்று ஆளுநருடன் சந்திப்பு இடம்பெற்றது. (ஐ-110)

## சாரதிக்கு பிணை

சாவகச்சேரி,செப்.8

கேரதீவு சங்குப்பிட்டியில் இடம்பெற்ற விபத்தில் கைது செய்யப்பட்ட டிப்பர் சாரதியை பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிமன்றம் அனுமதித்தது.

யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும், பூநகரியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த டிப்பரும் மோதி நேற்றுமுன்தினம் விபத்துக்குள்ளாகின.

அதில் உரும்பிராயைச் சேர்ந்த 47 வயது குடும்பப்பெண் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், டிப்பரின் சாரதியைக் கைதுசெய்து, நேற்று நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிவான் சாரதியை இரண்டு லட்சம் ரூபா ஆள் பிணையில் செல்ல அனுமதித்தார். (க-9)



## கலந்துரையாடல்

மன்னார், செப்.8

மது மற்றும் போதைப்பொருள்களுக்கு அடிமையாகி, இதன் மூலம் குற்றச் செயல்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருவோரை கிராம மட்டங்களுக்குச் சென்று சீர்திருத்தும் பணி தொடர்பான கலந்துரையாடல் மன்னாரில் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட சீர்திருத்த திணைக்கள அதிகாரி என்.எம்.நஜமும் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் மன்னார் மாவட்டத்தின் ஐந்து பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சமுதாய சீர்திருத்த அபிவிருத்தி அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் பிரதேச மட்டங்களில் நிலவிவரும் பிரச்சினைகள் தொடர்பாக அடையாளப்படுத்தப்பட்டன. இது தொடர்பில் விழிப்புணர்வு செயற்றிட்டங்களை எவ்வாறு முன்னெடுத்துச் செல்லலாம் என்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது. (ஐ-60)

## குடும்பப் பிரச்சினைகள் கொரோனாவுடன் அதிகம்

*பொலிஸ் தகவல்கள் சுட்டிக்காட்டு*

மன்னார்,செப்.8

கொரோனாவுக்கு பின்னர் பெரியளவான குற்றச்செயல்கள் குறைவடைந்துள்ள நிலையில், குடும்பப் பிரச்சினைகள் அதிகரித்துள்ளன என்று முருங்கன் பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொரோனா வைரஸ் நாட்டில் பரவ ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து நாடுமுழுவதும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

இதனால் பெரியளவான குற்றச் செயல்கள் நடைபெறவில்லை. மாறாக குடும்பப்பிரச்சினைகளே அதிகரித்துள்ளன. இதன்படி கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டதில் இருந்து நேற்றுவரை 40 குடும்பப் பிரச்சினைகள் பதிவாகியுள்ளன.

அத்துடன் 2 கஞ்சா வழக்குகளும்,10 மணல் கடத்தல் வழக்குகளும் பதிவாகியுள்ளன என முருங்கன் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-213)

## போக்குவரத்துக்கு இடையூறாக வீதியோரத்தில் கற்குவியல்

*நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை*



போக்குவரத்துக்கு இடையூறாக வீதியில் கற்களைப் பறித்ததுடன், அது தொடர்பாக உரிய தரப்பினரிடம் முறைப்பாடுகளை வழங்கும் மக்கள் மிரட்டலுக்கும் உட்படுத்தப்படுகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கரவெட்டி பிரதேச சபைக்குட்பட்ட அல்வாய் வடக்கு மேற்கு சாமணந்தறை வீதியிலேயே பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு தரும் வகையில் வீதியோரத்தில் கற்கள் குவிக்கப்பட்டுள்ளன.

இதனால் அந்தப் பகுதி மக்கள் பல மைல் தூரம் சுற்றி தமது போக்குவரத்தை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கற்களை அப்புறப்படுத்துமாறு உரிமையாளரிடமும், பிரதேச சபைத் தவிசாளரிடமும் மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். எனினும் முறைப்பாடு தெரிவிக்கும் பொதுமக்கள் அச்சுறுத்தல்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்தக் கற்களை அகற்றுமாறு உள்ளூராட்சிஆணையாளரால் பிரதேச சபைக்கு அறிவிக்கப்பட்டது. எனினும் கற்கள் அகற்றப்படவில்லை. இது தொடர்பாக மாகாண ஆளுநருக்கு முறையிடப்பட்டுள்ளது என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

கற்களும் இடிபாடுகளும் பறிக்கப்பட்டு மதில் வேலைகள் முடிவடைந்து ஒருவருடம் ஆகியும், அந்த இடிபாடுகளும் மீதிக் கற்களும் இதுவரை அகற்றப்படாததால் வாகனங்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்த மக்கள், அதிகாரிகள் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர். (ஐ-159)



கொடிகாமம் வடக்கு கேசரப்பிட்டி பெரிய தம்பிரான் பிள்ளையார் உடனுறை காளியம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் தீர்த்தத் திருவிழா ஆலய பிரதம குரு சிவஸ்ரீ நீலகண்டக் குருக்கள் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. (ஐ-159)

## பிரதேச செயலகத்தால் குடும்ப விவரம் திரட்டல்

வவுனியா,செப்.8

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட குடும்பங்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்குமாறு வவுனியா பிரதேச செயலாளர் ந.கமலதாசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

புதிதாக நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்கள் மக்களின் வீடுகளுக்கு வருகை தரும் சமயத்தில் அவர்களது அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொண்டு அவர்களால் கேட்கப்படும் விவரங்களை வழங்கி ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இதற்கென குடும்ப விவர அட்டை அல்லது அதற்கு பதிலாக வழங்கப்பட்ட ஆவணம், 2019 வாக்காளர் இடாப்பு சிட்டை, குடும்ப அங்கத்தவர்களின் விவரங்கள், பிறப்பு சான்றிதழ்கள், தேசிய அடையாள அட்டை, திருமணச்சான்றிதழ், தொலைபேசி இலக்கம், கொடுப்பனவு விவரம் , காணி ஆவணங்கள் ஆகியவற்றை பொதுமக்கள் தயார் நிலையில் வைத்திருக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஐ-18)



## காலபோக பயிர்ச் செய்கை தொடர்பான கூட்டம்

இருபாலை,செப்.8

இருபாலை தெற்கு கமக்கார அமைப்பின் காலபோக பயிர்ச் செய்கைக்கான கூட்டம் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இக் கூட்டத்தில் தரிசு நிலங்களை விளைச்சலுக்கு உள்வாங்குதல், குளங்கள் சீரமைப்பு, விவசாய வீதிகள் அமைத்தல் எனப் பல முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# உள்ளக இடமாற்றத்தில் அதிகாரிகள் பாகுபாடு

## வவுனியா மருத்துவமனையின் விடுதிச் சகோதரிகள் குற்றச்சாட்டு



வவுனியா,செப்.8

**வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் கடமையாற்றும் விடுதிச் சகோதரிகளின் உள்ளக இடமாற்றத்தில் முறைகேடுகள் நிலவி வருகின்றன என அவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

மருத்துவமனையின் விடுதிச் சகோதரிகளாக 13பேர் கடமையாற்றுகின்றனர். அவர்களுக்கான உள்ளக இடமாற்றம் தொடர்பில் நிர்வாகம் கவனம் செலுத்தியுள்ளது. எனினும் இந்த உள்ளக இடமாற்றத்தில் ஒரு சில விடுதிச் சகோதரிகள் உயர் அதிகாரிகளின் செல்வாக்குடன் அவர்களது இடமாற்றத்தைத் தவிர்த்துள்ளனர் என்றும், அவர்களை விடுத்து ஏனையவர்களை உள்ளக இடமாற்றத்துக்குச் செல்லுமாறு நிர்வாகம் அழுத்தம் கொடுக்கின்றது என்றும் பாதிக்கப்பட்ட விடுதிச் சகோதரிகள் குற்றஞ்சாட்டியுள்ள னர்.

அத்தோடு மருத்துவமனையில் பணியாற்றும் 13 விடுதிச் சகோதரிகளுக்கும் ஒரே நேரத்தில் உள்ளக இடமாற்றம் வழங்கும் பட்சத்தில் தாமும் இடமாற்றத்துக்கு ஆதரவு தெரிவிக்கின்றோம் எனவும் நிர்வாகத்தின் அழுத்தம் தமக்கு மாத்திரம் அதிகரிக்குமாயின் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளோம் எனவும் தெரிவித்தனர்.

"உள்ளக இடமாற்றம் அனைத்து மாவட்ட மருத்துவமனையிலும் நடைமுறையில் உள்ளது போலவே எமது மருத்துவமனையிலும் நாம் உள்ளக இடமாற்றம் வழங்கியுள்ளோம். நிர்வாகத்தால் வழங்கப்படும் உள்ளக இடமாற்றத்துக்கு ஏற்ப அனைவரும் செயற்பட வேண்டும். உயர் அதிகாரிகளின் சிபாரிசில் இங்கு எவருக்கும் இடமாற்றம் நிறுத்தப்படவில்லை" என்று வவுனியா மாவட்ட பொது மருத்துவமனைப் பணிப்பாளர் கே.நந்தகுமார் தெரிவித்தார். (ஐ-18)

# நுண்கடன் பிரச்சினைகள்; யாழ்ப்பாணத்தில் ஆராய்வு

யாழ்ப்பாணம்,செப்.8

வடக்கு மாகாணத்தில் நுண் கடன்களால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

போரின் பின்னர் வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் நுண்கடன் நிதி நிறுவனங்களால் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் மற்றும் நிதி நிறுவனங்களின் கொடுக்கல் வாங்கல்களால் சமுதாயத்தில் இடம்பெறுகின்ற பிரச்சினைகள், வங்கிக் கடனை மீளச் செலுத்த முடியாமல் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டன. இறக்குமதி செய்யப்படுகின்ற பொருள்கள் சிலவற்றுக்கு அரசு தடைவிதித்திருப்பதால் பணத்தைப் பெறுவதில் தொழில் முயற்சியாளர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். அதனால் அதிக வட்டிக்குப் பணத்தைப் பெற்று அதனைச் செலுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

அரசு சரியான திட்டங்களை நடைமுறைப்படுத்தி, அவற்றைச் செயற்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மாவட்டச் செயலாளர் க.மகேசன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் டபிள்யு.டி.லக்ஸ்மன் மற்றும் பிரதி மத்திய வங்கி ஆளுநர் கே.எம்.எம்.சிறிவர்த்தன, நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், இலங்கை மத்திய வங்கியின் துணை ஆளுநர்களான டி. நாணயக்கார, ஆர்.கருணாரத்ன மற்றும் யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலர்கள் கலந்து கொண்டனர். (க-20)

# இளையோருக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப்.8

கியூடெக் கரித்தாஸ் சமாதான நல்லிணக்க செயற்றிட்டத்தில் இளையோருக்கான கலந்துரையாடல் அண்மையில் சாட்டிமாதா கோவில் வளாகத்தில் நடைபெற்றது.


அதன்போது 'இன்றைய இளையோர் இன்றைய பொறுப்பு ஏற்கும் முன்மாதிரிகளாக மாறவேண்டும். அதற்கான செயற்பாடுகளே குழுக் கலந்துரையாடல்களாக, ஒன்றுகூடல்களாக, துப்புரவுப் பணிகளாக கடற்கரை சுற்றுச் சூழல் சுத்தப்படுத்தல்களாக சமூக மட்டத்திலும் செயற்படுத்தி விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் செயல்களே சிறந்த அடையாளமாகும்." என்று கியூடெக் கரித்தாஸ் இயக்குநர் அருட்பணி ச.இயூஜின் பிரான்சிஸ் அடிகளார் தெரிவித்தார். (ஐ)

# இடித்து அழிக்கப்பட்ட ஆலயத்தை வழிபடுவதற்கு நீதிமன்று அனுமதி

யாழ்ப்பாணம், செப்.8

யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் கடந்த 2019ஆம் ஆண்டு இடித்தழிக்கப்பட்ட பழைமை வாய்ந்த ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்ள யாழ்ப்பாண நீதிவான் மன்று அனுமதி வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம், மூளாய் வீதி சுண்டுக்குழியில் தனியாருக்குச் சொந்தமான காணி ஒன்றில் காலாதி காலமாக மக்கள் வழிபட்டு வந்த சாமுண்டிகா ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம் கடந்த 2019ஆம் ஆண்டு அந்தக் காணியின் உரிமையாளர் என்று தன்னை அடையாளப்படுத்திய ஒருவரால் இடித்து அழிக்கப்பட்டது. அத்தோடு, அந்தக் கோவில் அமைந்திருந்த காணி அடைக்கப்பட்டு காணிக்குள் செல்வதற்கும் தடை விதிக்கபபட்டது. இது தொடர்பாக ஆலயத்தை வழிபட்டு வந்த மக்கள் கடும் விசனமடைந்தனர். இந்து அமைப்புக்கள் அந்தச் சம்பவத்துக்கு கடும் எதிர்ப்புக்களை வெளியிட்டிருந்தன.



சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. நீதி கோரி சட்டத்தரணியூடாக யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. நீதிமன்ற விசாரணைகளை அடுத்து, குறித்த ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்ளலாம் என்று யாழ்ப்பாண நீதிமன்று அண்மையில் தீர்ப்பு வழங்கியுள்ளது. ஆலயம் அமைந்துள்ள காணிக்குள் மக்கள் செல்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ப-21)

# வெள்ளை நிற நாவல் வன்னியில் புதிதல்ல

### *விவசாய ஆராய்ச்சி பணிப்பாளர் தெரிவிப்பு*

கிளிநொச்சி, செப்.8

கிளிநொச்சியில் காணப்பட்ட வெள்ளை நிற நாவல் புதியதல்ல, ஏற்கனவே கிளிநொச்சி பூநகரியில் கண்டுபிடிக்கப்பட்டது தான் என்று கிளிநொச்சி இரணைமடு விவசாய ஆராய்ச்சி நிலையப் பணிப்பாளர் கலாநிதி அரசகேசரி தெரிவித்தார்.

கிளிநொச்சியில் வெள்ளை நிறத்திலான நாவல் பழங்களைக் கொண்ட நாவல் மர இனம் அடையாளம் காணப்பட்டுள்ளது. கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் உழவனூர் கிராமத்தில் தனியார் ஒருவரின் காணியிலேயே அந்த மரம் இனங் காணப்பட்டுள்ளது என்று வெளிவந்த செய்தி தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"அந்த நாவல் இனம் ஏற்கனவே பூநகரிப் பகுதியில் கடந்த 2014ஆம் ஆண்டு அடையாளம் காணப்பட்டது. அந்த இனம் தொடர்பில் விவசாய ஆராய்ச்சி இடம் பெற்று வருகின்றது. அது ஓர் புதிய வகை இனமல்ல. நாவல் இனத்தில் இதுவும் ஓர் தனித்துவமான இனம்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-6)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,செப்.8

நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் நடத்தப்படும் வாராந்தச் சிறப்புச் சொற்பொழிவு எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறும்.

"அஞ்சு முகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும் " என்னும் தலைப்பில் இளம் சைவப்புலவர் க.கைலவாசன் ஆன்மீகவுரை ஆற்றுவார். (க)

# சம்பந்தன் எம்.பியை கிண்டலடித்த பீரிஸ்

கொழும்பு, செப்.8

எந்தவொரு திருத்தத்தையும் முன்வைக்காமல் ஆளுங்கட்சியின் ஐந்து வரவு-செலவுத் திட்டங்களை ஆதரித்த உலகில் ஒரேயொரு எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் ஆவார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும், அமைச்சருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் விமர்சித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது;

நல்லாட்சியின்போது எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகித்த சம்பந்தன் அரசாங்க பங்காளியாகவே செயற்பட்டார். அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டு வரவு-செலவுத்திட்டங்களைப் பகுப்பாய்வு செய்யவில்லை. மக்களுக்காக எந்தவொரு திருத்தங்களையும் முன்வைக்காமல் தொடர்ச்சியாக ஐந்து பட்ஜெட்டுகளை ஆதரித்துள்ளார்.

உலகில் இவ்வாறு செயற்பட்ட ஒரேயொரு எதிர்க்கட்சித் தலைவர் அவராவார் என்பதே உண்மை. எனவே, அரசமைப்புப் பேரவைக்குக்கூட பிரதமரும், எதிர்க்கட்சித் தலைவரும் இணைந்தே உறுப்பினர்களைத் தெரிவுசெய்தனர். பிறகு எப்படி அது சுயாதீனமாக இயங்கியிருக்க முடியும்? இச் சபையின் அனுமதியின்றி ஜனாதிபதியால் சுயாதீன ஆணைக்குழுக்களை நியமிக்கமுடியாது. இந்நிலைமையை மாற்றியமைப்போம்- என்றார். (ப-44)

# மாகாணத் தேர்தலில் ஆளும் தரப்பை ஆதரித்தால் அடக்குமுறை தொடரும்

## கோவிந்தன் கருணாகரம் எம்.பி. ஆதங்கம்

மட்டக்களப்பு, செப்.8



**மாகாண சபைத் தேர்தலில் ஆளும் தரப்புக்கு ஆதரவு தெரிவித்தோமேயானால் எமக்குக் கிடைத்த அடிப்படைப் புள்ளியான மாகாண சபை முறைமை உரிமை கூட எதிர்காலத்திலே இல்லாமல் போகும். இதனால், எமது மக்கள் மீண்டும் அடக்குமுறைக்குச் செல்லும் நிலைமை ஏற்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது;
2020ஆம் ஆண்டு தேர்தல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாத்திரமல்ல ஒட்டு மொத்த தமிழ் மக்களுக்கே ஒரு பேரிடியாக, சரிவாக, இழப்பாக முடிந்துள்ளது. மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுள்ள அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மக்கள் ஒதுக்கி வைத்துள்ளார்கள். அவர்கள் ஏக பிரதிநிதிகள் அல்லர் எனக் கருதி தங்களுக்குச் சாதகமானவர்களையே தமிழ் மக்கள் தெரிவு செய்திருக்கின்றார்கள், இனப்பிரச்சினை தீர்வு விடயங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச வேண்டிய அவசியமில்லை என்ற வெற்றி மமதையில் உள்ளனர். அமைச்சர்கள் சிலர் மாகாண சபை முறைமையைக் கூட ஒழிக்க வேண்டும் எனக் கூறுகின்றனர். பொதுஜன பெரமுன கிழக்கு மாகாண சபையைக் கைப்பற்றும் என பஸில் ராஜபக் ஷ கூறி யுள்ளார். தற்போது 19 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கி 20ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வர வர்த்தமானியில் அறிவித்தல் விடுத்துள்ளனர். அந்த 20ஆவது திருத்தச் சட்டம் ஒரு குடும்ப ஆட்சியை, இராணுவமயமான ஆட்சியை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக அமையப்பெறுகிறது. மாகாண சபை முறைமையை தக்க வைக்க வேண்டுமானால் கிழக்கு மாகாண சபையை நாம் கைப்பற்ற வேண்டும். எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலிலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிக ஆசனங்களைப் பெற நாம் அனைவரும் ஒன்றாகப் பயணிக்க வேண்டிய தேவை இருக்கிறது - என்றார். (ப-150)

---

# நாட்டின் நிர்வாகத்துக்கு 19 பெரும் தடை!

## அமைச்சர் தினேஸ் குற்றச்சாட்டு

கொழும்பு செப்.8
நாட்டின் நிர்வாகம் மற்றும் கொண்டு நடத்தல் என்பவற்றுக்குப் பெரும் தடையாக 19ஆவது திருத்தச்சட்டம் காணப்படுகின்றது. அதனைக் கடந்த ஆட்சியில் மக்கள் கண்டனர் என அமைச்சர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;
மக்களின் மற்றும் நாடாளுமன்றத்தின் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். தடைகளை நீக்கி நாட்டை முன்னோக்கி நகர்த்த வேண்டும். அதற்காகவே மக்கள் ஆணையை வழங்கியுள்ளனர். நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் அதன் இருப்பு என்பனவற்றைக் கருத்திற்கொண்டே அரசாங்கம் 20ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது.
ஆனால் தற்போது 20 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டாலும் விரைவில் முழுமையான புதிய அரசமைப்பு உருவாக்கப்படும். அதற்கான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளன - என்றார். (ப-இ)

---



# விற்பனைக்குத் தயாரான கஞ்சா ‘பக்கெற்றுகள்’ மீட்பு

## சந்தேகநபர்கள் கைது

கண்டி, செப்.8
கண்டி, கம்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போத்தலப்பிட்டிய பிரதேசத்தில் 40 இற்கும் மேற்பட்ட கேரளக் கஞ்சா பக்கெற்றுகள் மீட்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
போதைப்பொருள் பொலிஸ் பிரிவினர் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே விற்பனை செய்வதற்காக வைக்கப்பட்டிருந்த இந்த கேரளக் கஞ்சா பக்கெற்றுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றுடன் சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கஞ்சா பக்கெற் ஒன்று ஆயிரம் ரூபாக்கு விற்பனை செய்யப்பட்டு வந்ததாக கைதுசெய்யப்பட்ட நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப கட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது. அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப)

---

# தேர்தல் முறைமையில் மாற்றங்கள் வேண்டும்

## *அமைச்சர் சந்ரசேன கோரிக்கை*

விருப்பு வாக்குமுறைமையை நீக்கி பொருத்தமான தேர்தல் முறைமையை அறிமுகம்செய்யுமாறு புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பான 9 பேர் அடங்கிய குழுவினரிடம் காணி விவகார அமைச்சர் எஸ்.எம்.சந்ரசேன கோரிக்கை விடுத்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
நடைமுறையில் உள்ள விருப்பு வாக்கு முறைமை பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது. பொருத்தமற்ற ஒரு தேர்தல் முறைமையாகக் காணப்படுகிறது. தேர்தல் முறைமையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை எதிர்த் தரப்பினரும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். ஆகவே புதிய அரசமைப்பில் நாட்டுக்குப் பொருந்தும் வகையில் தேர்தல் முறைமை அறிமுகம் செய்யப்படும். முரண்பாடற்ற, நாட்டுக்குப் பொருந்தும் தேர்தல் முறைமையை அறிமுகப்படுத்துமாறு புதிய அரசமைப்புத் தொடர்பில் ஆராயும் 9 பேர் அடங்கிய குழுவினரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். தேர்தல் முறைமை தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் 2014ஆம் ஆண்டு காலப்பகுதியில் அறிமுகம் செய்த தேர்தல் திருத்த முறைமையிலான அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பது அரசாங்கத்தின் நிலைப்பாடாக உள்ளது - என்றார். (ப-இ)

---

# ஜனாதிபதிக்கு அதிகாரங்கள் வழங்கப்படுகின்றமை சரியே!

## *அமைச்சர் ரணதுங்க வக்காலத்து*

கொழும்பு, செப்.8



பலமான அரச நிர்வாகத்தை மீண்டும் ஸ்தாபிக்கவே ஜனாதிபதிக்கு நிறைவேற்று அதிகாரம் முழுமையாக 20 ஆவது திருத்தத்தில் வழங்கப்பட்டுள்ளது. இரட்டைக் குடியுரிமை கொண்டவர் அரசியலில் செல்வாக்குச் செலுத்துவதால் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தைப் பலப்படுத்துவதாகக் குறிப்பிட்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறைமை பலவீனப்படுத்தப்பட்டது. இறுதியில் நிறைவேற்றுத் தறையும், சட்டவாக்கத்துறையும் முரண்பட்டுக் கொண்டமை மாத்திரமே கடந்த ஆட்சியின் பெறுபேறாக அமைந்தது.
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவுக்கு நிறைவேற்று அதிகாரங்கள் முழுமையாக வழங்கப்பட்டதன் காரணமாகவே 30 வருட காலப் போர் குறுகிய காலத்தில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு நாடு பொருளாதார, நிர்மாணத்துறையில் முன்னேற்றமடைந்தது. அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தில் ஜனாதிபதிக்கு முழுமையான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளமை ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயம். - என்றார். (ப-இ)

---

# பிரதமர் மஹிந்தவின் அதிகாரங்கள் பறிப்பு?

## *மரிக்கார் எம்.பி. குற்றச்சாட்டு*

கொழும்பு, செப்.8
20 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் மூலம் பிரதமரின் அதிகாரங்கள் பறிக்கப்பட்டுள்ளன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
பிரதமருக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களை ஜனாதிபதி பெற்றுக்கொண்டு பிரதமரை ஒரு நிர்வாகியாக 20 ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் கொண்டுவருவதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ முயற்சித்துள்ளார். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது ஆட்சிகாலத்தில் எவ்வாறு முன்னாள் பிரதமர் தி.மு. ஜயரத்னவை நடத்தினாரோ, அவ்வாறே அவரது சகோதரனே அவருக்குள்ள அதிகாரங்களைப் பறித்துக் கொண்டுள்ளார் - என்றார். (ப-இ)

---

# 13ஐ நீக்க இதுவரை தீர்மானம் இல்லை

## இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய தெரிவிப்பு

கொழும்பு, செப்.8
13ஆவது திருத்தச்சட்டத்தை நீக்குவது தொடர்பாக கொள்கைத் தீர்மானங்கள் எதனையும் எமது நாடாளுமன்றக் குழு எடுக்கவில்லை என்று பிராந்திய உறவுகள், நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய தெரிவித்துள்ளார்.
கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது; இதுவரையில் 13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று எந்தவொரு தீர்மானமும் எமது நாடாளுமன்றக் குழுவிலே எடுக்கப்படவில்லை. இந்த விடயத்தில் எமது தரப்பில் சிறுகுழுவினரே அவ்விதமான நிலைப்பாட்டைக் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். ஆகவே இது அரசாங்கத்தின் அயல் நாடுகளுடனான உறவுடன் சம்பந்தப்பட்ட விடயமொன்றாகின்றது. நான் மாகாண சபையின் ஊடாகவே அரசியலில் பிரவேசித்தேன். அதனடிப்படையில் மாகாண சபை முறைமை தொடர வேண்டும் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும் - என்றார். (ப-இ)

ஞானமுத்து அன்ரன் சாள்ஸ்,
(ஊர்காவற்றுறை கோட்ட ஆணையாளர் –சுற்றாடல் முன்னோடி).
ஊர்காவற்றுறை கரம்பொன் சண்முகநாத ம.வி.

# பனையை தாக்கும் பூச்சிப்பீடை



பனை (Palmyra palm), புல்லினத்தைச் சேர்ந்த ஒரு தாவரப் பேரினம், தாவரவியல் வகைப்பாட்டில் இதை போராசஸ் (borassus) என்னும் பேரினத்தில் அடக்குவர். இப் பேரினத்தில் பல சிற்றினங்கள் அடங்குகின்றன.

ஆபிரிக்காவில் தோன்றியதாக நம்பப்படும் பனைமரம், தமிழர்களுடனே பயணம் செய்கிறது. இந்தியா, இலங்கையின் வடக்கு, கிழக்கு மலேசியா, கம்போடியா, இந்தோனேஷியா, மொரீசியஸ், தென்னாப்பிரிக்கா என தமிழர் வாழும், அல்லது வாழ்ந்த பகுதிகளில் மட்டுமே பனைமரங்களும் வாழ்கின்றன.

சங்க காலம் முதல், தமிழரின் வாழ்வில் பனைமரம் ஒரு அங்கமாகவே இருந்துள்ளது. திருக்குடந்த அருணாசலக் கவிராயர் என்பவர் இயற்றியுள்ள "தால விலாசம்" என்ற நூலில், பனைமரத்தின் மூலம் மனித சமூகத்துக்கு 801 வகையான பயன்கள் கிடைப்பதாகக் கூறியுள்ளார்.

திருக்குறளில் மொத்தமே இரண்டு மரங்கள் தான் இடம்பெற்றுள்ளன. ஒன்று மூங்கில், மற்றையது பனை.

தமிழ்மொழி வளர்ந்ததற்குப் பனை ஓலைச்சுவடிகளை முக்கிய காரணமாகச் சொல்லலாம். பனை மரங்களுக்கும் தமிழர்களுக்கும் நீண்டகாலத் தொடர்பு உள்ளது. பனை ஓலைச்சுவடிகள்தான் எமது பொக்கிஷங்கள். அவற்றை எப்படி தயாரித்தார்கள் என்பது வியப்பான விஷயமே.

போர்க்காலங்களில் இரசாயனப் பொருட்களால் ஆன சவர்க்கார வகைகள் கிடைக்காத போது பனம்பழங்களையே அதற்குப்பதிலாக பயன்படுத்தினர். பனம்பழத்திலிருந்து ஒருவித பற்பசையையும் கண்டுபிடித்து அதையும் பயன்பாட்டுக்கு கொண்டுவந்தனர். பனம்பழம் உண்ணச் சுவையானது. ஏனைய பழங்களைப்போல் பனம்பழத்தை நேரடியாக உண்ண மாட்டார்கள். இதனை நெருப்பில் சுட்டு உண்பது தான் வழக்கம். நெருப்பில் சுட்ட இப் பழத்தின் தோலை உரித்து எடுத்தபின், களியைப் பிழிந்து உண்பார்கள். இக் களியைப் பதப்படுத்திப் பல வகையான உணவுப் பொருட்களையும் செய்வது உண்டு. பனையின் குருத்துக்களிலிருந்து செய்யப்பட்ட பெட்டிகள் மற்றும் சுளகு ஆகியவற்றில் பல சரக்கு பொருட்களை இட்டு வைத்தனர். பால் பொருட்கள் வைக்கப்பட்ட பானைகளை பனை உறிகளில் வைத்து தொங்கவிட்டனர், பனைஓலையில் செய்யப்பட்ட பாய்களில் படுத்துறங்கினர். பனையால் செய்யப்பட்ட துடைப்பங்கள், பனை நாரிலிருந்து கயிறுகள் ஆகியவற்றை பயன்படுத்தினர். பனை விசிறி, குடை, காதணிகள், சிறுவர் விளையாடும் காற்றாடி, பனையோலை வெடி, பனங் கள், வாசல் கால்மிதிகள், தடுக்குகள், மீன் மற்றும் இறைச்சிகள் வைக்கும் பெட்டிகள் என பனையால் நிறைந்தது தமிழர் வாழ்வு. இவற்றையெல்லாம் தாண்டி பனை நுங்கு, பனை வெல்லம், பனங் கற்கண்டு, பதநீர், பனங்கிழங்கு என பனை தமிழர் வாழ்வில் தனது அத்தனை பாகங்களாலும் பின்னிப்பிணைந்தது. பனம்பழம் சிறந்த சத்துணவு. பனம்பழத்தில் உள்ள பீட்டா கரோட்டின் எனப்படும் விட்டமின் ஏ கண்பார்வைக்கு மிகவும் சிறந்த தாகின்றது. அத்துடன் பனம்பழத்திலிருந்து பெறப்பட்ட கூழிலிருந்து ஜாம், குளிர்பானங்கள், உணவுப்பொருட் கள் தயாரிக்கப்படுகின்றன.

ஆணிவேர் இல்லாமல், 500க்கும் அதிகமான பக்க வேர்களைக் கொண்டுள்ள பனைமரத்தின் வேர்கள், சாதாரணமாக நூறடி அகலத்தில் முப்பதடி ஆழம் வரை நிலத்தில் செல்லும். இதனால், மண் சரிவும், மண்அரிப்பும் தடுக்கப்படும். கடினமான வழுவழுப்பான வேரின் உள்ளே சோற்றுப்பகுதியும், அதனுள்ளே நரம்பு போன்ற நீர் கடத்தும் வேரும் உள்ளதால், நிலத்தில் விழும் மழை நீர் இந்த வேர்களின் வழியாக சில நிமிடங்களில் நூறடி ஆழம்வரை மண்ணுக்குள் சென்றுவிடும். இவ்வளவு வேகமாக மழை நீரை வேறு எந்த தொழில் நுட்பம் மூலமாகவும் நிலத்தடி நீராக மாற்ற முடியாது.

அதே நேரத்தில், நிலத்தி லுள்ள தண்ணீரைத் தன்னுடைய இலைகளுக்கு உறிஞ்சாமல் வேரின் நடுப்பகுதியில் சேமித்து வைத்து, அந்தத் தண்ணீரைக் கொண்டே எவ்வளவு வறண்ட காலங்களிலும் வாழும் தன்மையும் பனை மரத்துக்கு உண்டு. அதனால்தான் நம் முன்னோர்கள் ஏரி, குளம், வாய்க்கால், வயல்வெளி என எங்கெல்லாம் தண்ணீர் தேங்குமோ அங்கெல்லாம் பனை மரங்களை நட்டு வளர்த்துள்ளார்கள்.

இன்றைக்கு, இயற்கையான முறையில் உரம், யூரியா போடாத வயலில் விளைந்த நெல் என்றும் காய்கறி என்றும் சொன்னால் அதைத்தான் உலகிலுள்ள எல்லா நாட்டு மக்களும் ஓடிப் போய் வரிசையில் நின்று, காத்திருந்து வாங்குகிறார்கள். மக்களுக்கு இயற்கையின் மீது நம்பிக்கையும், செயற்கையின் மீது பயமும் வந்து விட்டது. இதற்குக் காரணம் மனிதருக்கு வரும் புதிய புதிய நோய்கள்தான்.

இந்த நோய்க்குப் பயந்து இயற்கையின் பக்கம் போகும் மக்களுக்காக, ஒரு துளி கூட பூச்சி மருந்து அடிக்காமல், உரம் போடாமல் சொல்லப் போனால் தண்ணீர் கூட கலக்காமல் இயற்கையில் தானாக விளையும் ஒரு காமதேனு, பனை மரத்தின் உற்பத்திப் பொருட்கள் என்றால் மிகையாகாது. தவிர, இன்றைக்கு அரசுக்கு உள்ள ஒரு பெரும் பிரச்சினை, காடுகள், ஏரி, குளங்கள், ஆறுகள், நீர் நிலைகள் மற்றும் அரசுக்கு சொந்தமான இடங்களைப் பாதுகாப்பது முடியாத காரியமாக இருப்பதே. அதைத் தீர்க்க ஒரேவழி, எங்கெல்லாம் அரசின் நிலம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்படுகிறதோ, அங்கெல்லாம் பனை மரங்களை நடுகை செய்தால் போதும். பத்து தலைமுறைகளுக்கு இந்த மரங்கள் அந்த இடங்களையும், எதிர்கால மனித சமுதாயத்தையும் ஒருசேரப் பாதுகாக்கும். இதற்கெனத் தனியாக தண்ணீர் பாய்ச்சத் தேவையில்லை. மற்ற மரங்களைப் போல நிலை தோற்றுவித்து விவசாயத்தையும் பாதிக்காது. அதனால், பனைமரங்களைப் பாதுகாக்கவும், புதிதாக நடவும் பொது மக்களிடம் பரப்புரை மேற்கொள்ள வேண்டும். இதற்கு, இளைய தலைமுறையினரும், அரசும் முன்வர வேண்டும்"

> தமிழ்மொழி வளர்ந்ததற்குப் பனை ஓலைச்சுவடிகளை முக்கிய காரணமாகச் சொல்லலாம். பனை மரங்களுக்கும் தமிழர்களுக்கும் நீண்டகாலத் தொடர்பு உள்ளது. பனை ஓலைச்சுவடிகள்தான் எமது பொக்கிங்கள். அவற்றை எப்படி தயாரித்தார்கள் என்பது வியப்பான விஷயமே.

இவ்வளவு பயன்பாடுகளைக் கொண்ட இப்பனையின்மீது பீடைத்தாக்கம் இனங்காணப்பட்டுள்ளமை வேதனைக்குரியதொன்றாகும்.

கடந்த இரண்டு வருடங்களாகஇலைகளின் பெரும்பகுதியை உணவாகக் கொள்வதன் மூலம் அத்தாவர வளர்ச்சியை முற்றாகவோ அன்றி பகுதியாகவோ அழிக்கவல்ல ஒரு பீடை வகையினால் வடக்கின் அடையாளமாக காணப்படும் பனை மரங்களில் வடலிகள் முதல் முதிர்ச்சியடைந்த பனைகள் வரை வடக்கின்பல்வேறு பகுதிகளில் குறிப்பாக தீவக வேலணை, ஊர்காவற்றுறை, மண்கும்பான், தென்மராட்சி பிரதேசங்களில் தாக்கப்படுவது அவதானிக்கப்படுகிறது. வேறு இடங்களிலும் நிச்சயமாக இத்தாக்கம் அவதானிக்கப் படலாம்.

இப்பூச்சிப் பீடைத்தாக்கம் தொடர்பில் எமது தனிப்பட்ட அவதானிப்பு மற்றும் உயிர் வளர்ப்பு பரிசோதனை அடிப்படையிலும் இது ஒரு அந்துப்பூச்சி வகை என இனங்காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த அந்துப் பூச்சிபழுப்பு கலந்த வெள்ளை நிறமானதும் 1.2 செ,மீ நீளமும் 0.4 செ.மீ . அகலமானதுமாகும். சிறிய முட்டை பொரித்து வெளிவரும் குடம்பி 0.2 1.3 செ.மீ வரை வேறுபடுகிறது. இதன் வாழ்க்கை வட்டம் 2023 நாட்களாகும்.

அத்துடன் இதன் தாக்கம் இளம் வடலிப் பருவத்திலிருந்து மிக உயரமான முதிர்ந்த பனை மரத்தின் அனைத்து நிலை இலைகளையும் இவ் அந்துப் பூச்சியின் குடம்பி தன் வன்மைமிகு வாயுறுப்பின் மூலம் உணவாக்குவதன் மூலம் இலையின் அனைத்து பரப்பினையும் காய்ந்த ஓலையாக மாற்றிவிடுகிறது. அத்துடன் கடும் காற்று மற்றும் வெப்பத்திலிருந்து தன்னை தற்காத்துக் கொள்வதற்காக வாயினால் சுரக்கப்பட்ட நூலையும் தனது சமிபாடடையாத உணவுத் துணிக்கைகளையும் ஒன்றாக இணைப்பதன் மூலம் உருவாக்கிய கூடு போன்ற அமைப்பினுள் பாதுகாப்பாக இருந்தே இலைமேற்பரப்பைத் தாக்குகின்றது.

ஒவ்வோர் ஓலையிலும் 15-20 குடம்பிகள் தாக்கத்தில் ஈடுபடுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இலைகள் முற்றாக பாதிக்கப்படுவதனால், அப் பனையின் வளர்ச்சி மற்றும் விருத்தி பாதிப்படையும். அத்துடன் ஓலையை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில் வீழ்ச்சியடைவதோடு ஏனைய பனையோடிணைந்த அனைத்து உற்பத்திகளும் பாதிப்படைவதுடன் பிரதேச பிரதான தாவரப் போர்வை அச்சுறுத்தலுக்கு உள்ளாகும். தொடர்ந்தும் இவ்வாறு தாக்கம் நீடிப்பின் "பனை" குடித்தொகை வீழ்ச்சியை சந்திப்பது தவிர்க்க முடியாததாகிவிடும்.

இதனை கட்டுப்படுத்த பூச்சி நாசினி விசிறுவது பயனுடையது எனினும் சாத்தியம் குறைந்தது.

ஆனால் உயிரினவியற் கட்டுப்பாட்டுமுறையே மிகச்சிறப் பான முறையாகும். இப்பூச்சிப்பீடையைத் தேடி அழிப்பதற்கு அல்லது சூழலியற் சமநிலையை தக்கவாறு பேணுவதற்கு உயிரினவியற் கட்டுப்பாடே சிறப்பானது. இதற்கு மிகப் பொருத்தமாக வானம்பாடியும், இரட்டைவாற் கரிக்குருவி மற்றும் ஏனைய பூச்சியுண்ணி பறவைகள் ஆகியவற்றை முன்மொழிய முடியும்.

அத்துடன் காலத்துக்கு காலம் சீராக ஓலைகளை வெட்டி மரங்களை சுகாதாரமாகப் பேணுவதும், வேறு பொருத்தமான மூலோபாயங்களையும் இனங்கண்டு மேற்கொண்டு எம் பிரதேசத்து பனை மரங்களை நாம் காப்பாற்றியாக வேண்டும்.

ஏனெனில்,

"பனை" வெறும் மரம் மட்டுமல்ல; வடக்கின் அடையாளம்! தமிழரின் உயிர்!!



## இன்றைய நாள்

**மேடம்:** பிரச்சினை கட்டுக்குள் இருக்கும் நாள். வியாபாரத்தில் நேற்றிருந்த கவலைகள் தீரும். திருமணம் பற்றி நல்ல செய்திகள் வரும். வெளிநாட்டு முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள். பெரியவர்களின் ஆசி கிடைக்கும்.

**இடபம்:** எதிர்பார்த்த தனவரவு தாமதமாகும் நாள். பணியில் வெற்றிக்கு போராட வேண்டியிருக்கும். அரசாங்க உதவிகள் கிடைப்பதில் தடை ஏற்படும். பெண்களுக்கு சில சங்கடங்கள் உண்டாகும். கலைஞர்கள் சலிப்படையக்கூடும்.

**மிதுனம்:** உடல் நிலை பற்றி பயம் வந்து நீங்கும் நாள். கடுமையான முயற்சிகளால் களைப்படைய வாய்ப்புள்ளது. பூர்வ சொத்து பற்றிய வழக்கு இழுபறியாகவே இருக்கும்.

**கடகம்:** மனதில் மகிழ்ச்சி நிலவும் நாள். சொத்து சம்பந்தப்பட்ட வழக்கில் தீர்வு கிடைக்கும். குடும்பத்துடன் அதிக நேரம் செலவு செய்வீர்கள். தொழிலில் கூடுதல் கவனம் செலுத்துவீர்கள். பேச்சினால் நன்மை விளையும்.

**சிம்மம்:** வீண் அலைச்சல்கள் முடிவுக்கு வரும் நாள். கலைஞர்களின் வெற்றிக்கு முயற்சி தேவை. கணவன், மனைவி இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**கன்னி:** கூடுதல் முயற்சியால் பலன் கிடைக்கும் நாள். பணியா ளர்கள் வேலையில் மனநிம்மதி பெறு வர். திறமைகள் வெளிப்படும். வீட்டா ரின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**துலாம்:** காணாமல் போன பொருள்கள் கிடைக்கும் நாள். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். நல்ல செய்திகள் வரும். பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும்.

**விருச்சிகம்:** தொழிலில் ஏற்பட்ட தொல்லை நீங்கும் நாள். பணப்புழக்கம் சிறப்படையும். பணியாளர்களுக்கு நின்றுபோயிருந்த வேலைகள் முடியும். எதிர்பார்த்த நல்ல செய்தி வரும்.

**தனுசு:** கவலைகள் நீங்கும் நாள். வியாபாரத்தில் போட்டியாளர்களின் தொல்லை குறையும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். பிரச்னைக்குத் தீர்வு கிடைக்கும்.

**மகரம்:** சேமிக்கும் எண்ணம் உண்டாகும் நாள். உறவினர்களிடம் இருந்து நல்ல செய்தி வரும். தீய நண்பர்களின் சேர்க்கையைத் தவிர்க்கவும். எதிர்பாராத பாராட்டை பெறுவீர்கள்.

**கும்பம்:** முயற்சிகள் வெற்றி பெறும் நாள். எதிர்கால நலனுக்காக திட்டமிடுவீர்கள். பணியாளர்கள் அதிகம் உழைக்க வேண்டி வரும்.

**மீனம்:** செலவுக்கேற்ற வரவு வரும் நாள். முன்னேற்றப் பாதை கண்ணுக்குத் தெரியும். பணியாளர்கள் மனநிம்மதி அடைவர். மகன், மகள் பற்றிய கவலை தீரும்.

# பாடசாலை மாணவருக்கு முகக்கவசம் கட்டாயம்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் பரிந்துரை

கொழும்பு, செப். 8

பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் இன்று முதல் வழக்கம் போல் மீண்டும் ஆரம்பாகும் என்பதால், மாணவர்கள் முகக்கவசம் அணிவது உட்பட அவர்களுக்கு வழங்கப்படும் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றுவதை கட்டாயமாக்குமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசிடம் கோரியுள்ளது. கோவிட் 19 தொற்றுநோய் இன்னும் பல நாடுகளில் பரவலாக இருப்பதால், இந்த நோய் நம் நாட்டிலிருந்து ஒழிக்கப்பட்டுவிட்டது என்று கருத முடியாது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதி ஹரிதா அலுத்ஜ் தெரிவித்தார். (ம-இ)


## மகிழ்ச்சிக்கான வழிதேடி தலைமைத்துவப் பயிற்சி

கொடிகாமம், செப். 8

இலங்கை ஐக்கிய நாடுகள் நட்புறவு அமையத்தின் நிலைபேண் அபிவிருத்தி இலக்குகளுக்கான சாவகச்சேரி பிரதேச இளைஞர் சபை 'வே ரூ ஹப்பினஸ் பவுண்டேசன் இன்டர்நஷனல்' அமைப்புடன் இணைந்து தலைமைத்துவப் பயிற்சியொன்றை முன்னெடுத்துள்ளது.

'மகிழ்ச்சிக்கான வழி தேடி' என்ற தொனிப்பொருளில் இந்தத் தலைமைத்துவப் பயிற்சி இளைஞர் சபையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் நக்கீரன் தலைமையில் நாவற்குழி மகாவித்தியாலய பிரதான மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினராக சாவகச்சேரி பிரதேச இளைஞர் சேவை அதிகாரி அனுதரன் மற்றும் இளைஞர் சபையின் சிரேஸ்ட ஆலோசகர் யோகேஸ்வரன், நிர்வாக ஒருங்கிணைப்பாளர் சலூசா உட்பட பலர் கலந்து கொண்டனர். (ம-159)









கிளிநொச்சி மாவட்ட சவாரிச் சங்கத்தின் ஒழுங்குபடுத்தலில், வட்டக்கச்சி இராமநாதபுரம் கல்மடு வர்த்தக சங்கத்தினரின் ஏற்பாட்டில், கலைவாணி சவாரித்திடலில் மாபெரும் மாட்டு வண்டில் சவாரிப்போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. (க-21)

### ஆசிரியர் கடிதம்

## வாழ்த்துக்களும் எதிர்பார்ப்புக்களும்

வரலாற்றுப் பெருமை மிக்க கல்லூரி ஒன்றைக் கொடுத்து பெற்றுக்கொள்ளப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது வரலாற்றில், பன்முக ஆளுமை கொண்ட இரண்டாவது துணை வேந்தரை தன்னுள் உள்வாங்கியுள்ளது.

மிக நீண்ட நாள்களுக்குப் பின்னர் காணப்பட்ட வெற்றிடம் பேராசிரியர் சிவக்கொழுந்து ஸ்ரீ சற்குணராசாவால் நிரப்பப்பட்டுள்ளமை மகிழ்வைத் தருகிறது.

"தகவலே பலம்" என்ற தொழில்நுட்ப உலகுக்குள் நாம் தள்ளிவிடப்பட்டுள்ளோம். இந்தப் புரிதலில் நின்றபடி மரபுவழி பாதுகாக்கப்பட வேண்டியதும், மெருகூட்டப்பட வேண்டியதுமான கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் உட்பட, விவசாயம், விவசாயம் சார் கைத்தொழில்கள், மீன்பிடி போன்ற துறைகளில் பொருத்தமான தொழில்நுட்பங்களை உள்ளீர்த்து வலுவூட்டப்படக்கூடிய முன்னேற்றம் காணும் செயற்பாடுகளை புதிய துணைவேந்தருடாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இருந்து இழந்தவர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.!

சர்வதேச பல்கலைக் கழகங்களது தரத்துக்கு உயர்த்தும் செயற்பாடுகளை மெல்ல மெல்ல அதே நேரம், உறுதியுடன், தொடங்குவதற்கும், அனைத்து பீடங்களிலும் சர்வதேச பல்கலைக் கழக தரம் மிக்க பேராசிரியர்களை உள்வாங்கி, வழங்கும் பட்டங்களுக்கான தரத்தை உயர்த்துவதற்கும் ஏற்ற செயற்பாடுகளை, தடைகளைத் தாண்டி நிறைவேற்றுவார் என புதிய துணைவேந்தர் மீது மிகப் பெரிய நம்பிக்கையை நமது மண் வைத்துள்ளது.

**சி.முருகதாஸ் (ரவிராஜ்)**
**சமூக ஆர்வலர்**

# இலங்கையின் இறைமையை அமெ. உதவிகள் பாதிக்கா!

## இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் நம்பிக்கை



**கொழும்பு, செப். 8**
**அமெரிக்காவின் உதவித் திட்டங்கள் எதுவும் இலங்கையின் இறைமையைப் பாதிக்காது என்று அமெரிக்க தூதுவர் அலைனா தெரிவித்தார்.**

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
அமெரிக்காவின் இலங்கைக்கான திட்டங்கள் தொடர்பில் அண்மைக் காலமாக பிழையான கருத்துக்கள் காணப்படுகின்றன.
அவை துரதிஷ்டமானவை. பரஸ்பரம் இறைமையை மதித்துப் பாதுகாப்பதுதான் வலுவான ஒத்துழைப்பு.
எங்களின் எந்தத் திட்டங்களும் இலங்கையின் இறைமைக்கு பாதிப்பை ஏற்படுத்துபவையல்ல. இலங்கைக்கான திட்டங்களை உருவாக்குவதிலும், நடைமுறைப்படுத்துவதிலும் நாம் மிகுந்த வெளிப்படைத்தன்மையுடன் இருக்கின்றோம்.
நீண்ட கால ஜனநாயக வரலாற்றில் தங்கியிருப்பதன் மூலமும் இலங்கையின் ஜனநாயக கட்டமைப்புகளை வலுப்படுத்துவதன் மூலமும் இலங்கையுடனான அமெரிக்க உறவு பலப்படும் என்று நம்புகின்றோம் என்றார். (ம-இ)



கனடா, மொன்றியலைச் சேர்ந்த செல்வன் அசாந் கிரிசாந்தின் நினைவு நாளையொட்டி கிடைக்கப்பெற்ற நிதியின் மூலம், கல்வி பொருளாதார அமைப்பினரால் மாங்குளம் உயிரிழை அமைப்பின், முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட 13 பயனாளிகளுக்கு கடந்த சனிக்கிழமை சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டுள்ளன. (ந-222)

# தனிமைப்படுத்தலில் இருந்தவர் இறந்தார்

## நுவரெலியாவில் பரபரப்பு

கொழும்பு, செப். 8
நுவரெலியா தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்த 56 வயதுடைய சுப்பிரமணியம் அந்தகுமார் என்பவர் நேற்றுமுன்தினம் மாலை உயிரிழந்துள்ளார்.
இதையடுத்து நேற்றும் இன்றும் அந்தப் பகுதியில் பதற்றம் நிலவியது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:
டுபாய் நாட்டில் தனியார் நிறுவனமொன்றில் கடமையாற்றிய இவர் அண்மையில் இலங்கைக்கு வந்தார். அவர் நுவரெலியாவில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார். தனிமைக்காலம் முடிவடைய முன்னர் நேற்று மாலை அவர் உயிரிழந்தார்.
இதனால் கொரோனா பெருந்தொற்றால்தான் அவர் உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டது.
எனினும் கொரோனாவால் அவர் உயிரிழக்கவில்லை என்றும் நீரிழிவு மற்றும் பிறிதொருவகை வைரஸ் தொற்றால்தான் அவர் உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

# நியூ டயமண்ட் கப்பல் தீ; செலவை மதிப்பிட குழு

கொழும்பு, செப்.8
இலங்கையின் கிழக்கு கடலில் தீப்பற்றிய எம்டி நியூ டயமண்ட் கப்பலில் ஏற்பட்ட தீயை அணைத்து அதைப் பாதுகாக்க இலங்கை எடுத்த நடவடிக்கைகளின் செலவு மற்றும் சேத மதிப்பீட்டை மேற்கொள்ள ஒரு நிபுணர் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்த நிபுணர் குழு இன்று அல்லது நாளை காலை கப்பலின் இருப்பிடத்தைப் பார்வையிடும் என்று கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் பொது மேலாளர் கலாநிதி தர்னி பண்டரதீப் குமார தெரிவித்தார்.
நாட்டின் கடல் சூழலுக்கு ஏற்பட்ட சேதம் மற்றும் சம்பவத்தால் ஏற்பட்ட செலவுகள் மற்றும் இழப்புகள் தொடர்பில் முழு மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரிக்குமாறு சட்டமா அதிபர் நேற்றுமுன்தினம் அறிவுறுத்தினார். தீக் கட்டுப்பாடு நடவடிக்கையில் ஈடுபட்ட நிறுவனங்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின்போது அவர் இதனைத் தெரிவித்தார். (வ-இ)

# 'பாதாளயோ' நாவல் ஜனாதிபதியிடம் கையளிப்பு

கொழும்பு, செப்.8



பாதுகாப்புச் செயலாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்னவால் எழுதப்பட்ட "பாதாளயோ" என்ற நாவலும் "கோத்தாபய" என்ற நூலின் ஆங்கில பிரதியும் ஜனாதிபதியிடம் நேற்றுமுன்தினம் பிற்பகல் கையளிக்கப்பட்டது.
உண்மையான பல நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு "பாதாளயோ" என்ற நாவல் எழுதப்பட்டுள்ளது. "கோத்தாபய" என்ற சிங்கள நூல் கடந்த வருடம் வெளியிடப்பட்டிருந்ததுடன், இந்தமுறை அதன் ஆங்கில பிரதி வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்த இரு நூல்களினதும் வெளியீட்டு நிகழ்வு கொழும்பு ஆனந்தா கல்லூரியின் குலரத்ன மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. கமால் குணரத்னவால் இரண்டு நூல்களினதும் முதற் பிரதிகள், ஸ்ரீ கல்யாணி சாமகிரி தர்ம மகா சங்க சபையின் மகாநாயக்க தேரர் சங்கைக்குரிய இத்தேபானே தம்மாலங்கார நாயக்க தேரர் உள்ளிட்ட மகாசங்கத்தினருக்கு வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி நாவல்கள், கோத்தாபய ராஜபக் ஷவுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு வழங்கிவைக்கப்பட்டன. (ற-இ)

# புதிய பரிணாமத்தில் சமுர்த்தி சேவைகள்

## பயனாளிகள் விவரங்கள் கணினி மயப்படுத்தல் ஆரம்பம்

கொழும்பு, செப்.8
எதிர்வரும் 2021 ஆம் ஆண்டில் அனைத்து சமுர்த்தி சேவைகளும் கணினிமயப்படுத்தப்பட்டு புதிய பரிணாமத்தில் பொதுமக்களுக்கான சேவைகளை வழங்க உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதனடிப்படையில், நாட்டிலுள்ள அனைத்து சமுர்த்தி வங்கிகள் மற்றும் சமுர்த்தி வங்கிச் சங்கங்கள் (சமுர்த்தி மகாசங்கங்கள்) ஆகியவற்றை துரித கதியில் கணினிமயப்படுத்தும் நட வடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.
இது தொடர்பில் திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாவது,
தற்போது சமுர்த்தி திட்டத்தில் சமுர்த்தி வங்கிகள், சமுர்த்தி வங்கிச் சங்கங்கள் ஆகியவற்றின் சேவைகள் மிக முக்கியம் வாய்ந்த ஒன்றாக காணப்படுகின்றன.
கடந்த காலங்களில் ஏனைய நிதி நிறுவனங்களை விட குறுநிதிய வங்கிச்சேவையில் அதிகளவான பயனாளிகள் பயனடைந்துள்ளனர். அத்துடன் அவர்களது வாழ்க்கைத் தரமும் உயர்ச்சி அடைந்துள்ளது.
தற்கால நிலையில் சமுர்த்தி சேவைகளை விரிவாக்குவதற்காக சமுர்த்தி வங்கிகள் மற்றும் சங்கங்களை துரித கதியில் கணனிமயப்படுத்துவதற்கு சமுர்த்தி திணைக்களம் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது. சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு தகவல் தொழில் நுட்பம் தொடர்பிலான தொடர் பயிற்சிகள் வழங்கப்பட்டு இணைய வங்கிச் சேவைக்குள் சமுர்த்தி வங்கிகள், சமுர்த்தி சங்கங்கள் செல்வதற்கான இரகசிய இலக்கங்களை வழங்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.
நாட்டிலுள்ள 1,073 சமுர்த்தி வங்கிப் பிரிவுகள் மற்றும் 223 சமுர்த்தி மகா சங்கங்கள் ஆகியவற்றில் சுமார் 500க்கு மேற்பட்ட வங்கிகள் இது தொடர்பில் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளன. இதனடிப்படையில் சமுர்த்திப் பயனாளிகளின் விபரங்கள் கணனிமயப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
2021 ஆம் ஆண்டில் சமுர்த்தி வங்கிகள், சமுர்த்தி சங்கங்கள் அனைத்தும் கணனிமயப்படுத்தப்பட்டு பயனாளிகளின் வாடிக்கையாளர் சேவைகள் இலகுபடுத்தப்பட்டு புதிய பரிணாம வளர்ச்சியில் பொதுமக்களுக்கான சேவையினை வழங்கும் - என்றார். (ந-39)


# சிறை கழிவறைக்குள் கைதி உயிர்மாய்ப்பு

பொலநறுவை, செப்.8
சிறைக் கழிவறைக்குள் கைதியொருவர் தூக்கிட்டு உயிர்மாய்த்த சம்பவம் பொலநறுவை சிறைச்சாலையில் இடம்பெற்றுள்ளது.
போதைப்பொருள் குற்றச்சாட்டில் கைதுசெய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 28 வயதுடைய சந்தேகநபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (வ-இ)



# தருமபுரம் நெசவு நிலையத்தில் தொழிலாளர் தொகை வீழ்ச்சி

## உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை



**கிளிநொச்சி, செப் 8**
**கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தருமபுரம் கிராமத்தில் இயங்கிவரும் நுண் கலை நெசவு நிலையத்தில் தொழில் புரிவோர் எண்ணிக்கை அண்மைக்காலமாக குறைவடைந்துள்ளது.**

அவர்களுக்கு போதியளவு வருமானம் கிடைக்காமையே இதற்கான காரணம் என தெரிவிக்கப்படுகின்றது. நாற்பது வருடங்களாக சிறப்பாக இயங்கி வரும் இந்த நுண்கலை நெசவு நிலையத்தில் தற்போது வெறும் 5 பேர் தொழில்புரிகின்றனர்.

அத்துடன் 10க்கு மேற்பட்டவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இங்கு அதிகளவான உற்பத்திகள் செய்யக்கூடிய வசதிகள் காணப்படுகின்றன. உரிய அதிகாரிகள் கவனம் எடுக்கும் சந்தர்ப்பத்தில் இந்த நெசவு உற்பத்தி நிலையத்தில் இருந்து மாவட்டத்திற்கான நெசவு உற்பத்திகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-6)



# முதுசித்தம்

## சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், செப்.8
யாழ் .பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீட வவுனியா வளாக கல்வியியல் முதுமாணிக் கற்கைநெறி (அணி V) மாணவர்களின் முதுசித்தம் சஞ்சிகை வெளியீடும் ஒன்றுகூடலும் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா வளாக பிரதான மண்டபத்தில் தலைவர் க.ஆறுமுகதாஸ் தலைமையில் நடைபெற்றன.

யாழ் பல்கலைக்கழக முன்னாள் தேர்ச்சி மிகு அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி நூலை வெளியிட விருந்தினர்கள் பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர்.

இந் நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக யாழ் பல்கலைக்கழக முன்னாள் தேர்ச்சி மிகு அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி, வவுனியா வளாக முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரன், யாழ்ப்பாண பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் கு.மிகுந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ந-159)



வவுனியா குருமன்காடு

# காளியம்மன் ஆலயத்தில் ஆபத்தான குளவிக்கூடுகள்

வவுனியா, செப்.8
வவுனியா குருமன்காடு ஸ்ரீ காளியம்மன் ஆலயத்தின் நூழைவாயிலில் ஆபத்தான தேனி வகையைச் சேர்ந்த பெரிய குளவிக்கூடுகள் காணப்படுகின்றன. இதனால் ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். இது தொடர்பாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு அறிவிக்கப்பட்ட போதும், இவர்களால் எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இதே வேளை, வவுனியா நீர்த்தாங்கி மற்றும் அரச ஊழியர் விடுதியிலும் பெரிய குளவிக்கூடுகள் காணப்படுகின்ற நிலையில், இவற்றால் பொதுமக்களுக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே ஆபத்து ஏற்படுவதற்கு முன்னர் இவற்றை அழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மக்கள் கோரிக்கைவிடுக்கின்றனர். (ந-18)



இணுவிலைச் சேர்ந்த புலவர்மணி வை.க.சிற்றம்பலத்தின் நல்லூர் கலம்பகம் நூல் வெளியீட்டு விழா யாழ்ப்பாணம் கந்தர்மடம் பலாலி வீதியில் அமைந்துள்ள இந்துசமய பேரவையில் இடம்பெற்றது. நிகழ்வில் கலாபூஷணம் எஸ்.சிவஞானராசா வரவேற்புரையையும், புலவர் பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன் வாழ்த்துரையையும், இந்து சமய பேரவை செயலாளர் ஈ.ஸ்ரீசிவசக்திகிரீவன் தலைமையுரையையும், வலிகாமம் வலய (தமிழ்) ஆசிரிய ஆலோசகர் கவிஞர் ம.பா.மகாலிங்கசிவம் நூல் அறிமுக உரை மற்றும் ஆய்வுரையையும், பதிப்பாசிரியர் பதிலுரை மற்றும் நன்றியுரையையும் நிகழ்த்தினர். (ந-159)

யாரோடு நோவோம்



# குற்றங்கள் மலிவதன் மர்மமென்ன?

வடமாகாணம் இப்பொழுது ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலை போன்றே காணப்படுகிறது. வழிபாட்டுத் தலங்கள் உட்பட அனைத்து இடங்களிலும் பாதுகாப்புப் பணியில் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். பொலிஸாருக்கும் சீருடையணிந்த இராணுவத்தினருக்கும், மேலதிகமாக விசேட அதிரடிப்படையினர் இரகசியப் பொலிஸார், மற்றும் புலனாய்வுப் பிரிவினர், சீருடை இல்லாத ஒற்றர்கள் என எங்கோ ஒரு மூலையில் இருந்து கொண்டே இருக்கின்றனர்.

அதாவது ஒவ்வொருவரின் நடமாட்டமும் அவதானிக்கப்படுகின்றது. மக்கள் தமது சொந்த விவகாரங்களைக் கூட உரத்துப் பேசிக் கொள்ள அஞ்சும் நிலையில் இருக்கின்றனர். எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கின்றதோ என்று தெரியாத நிலையில் அஞ்சி வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் இவ்வளவு கெடுபிடிகளுக்கும் மத்தியில் வழிப்பறி கொள்ளைகள், வாள் வெட்டுக்கள், போதைப்பொருள் விற்பனை, கடத்தல்கள் என பல்வேறு குற்றச்செயல்களும் அன்றாடம் இடம்பெற்றுக் கொண்டே தான் இருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் பொலிஸாரினதும் படையினரினதும் கால்தடம் பதியாத இடங்களே இல்லை. பிக்பாஸ் நிகழ்ச்சியில் சொல்வது போல, எவரும் ஓடவும் முடியாது, ஒளியவும் முடியாது என்கிற நிலைதான். அப்படி இறுக்கமான கண்காணிப்பு.

இருப்பினும் இந்த இரும்புவளையக் கண்காணிப்புகளையும் தாண்டி குற்றச் செயல்கள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றமையால் எப்படி? இந்த குற்றச் செயல்களின் பின்னணியில் இருப்பவர்கள் யார்? சூத்திரதாரிகள் யார்? எவ்வாறு இடம்பெறுகின்றன? இந்தக் குற்றச் செயல்கள் தொடர்பான தகவல்கள் பாதுகாப்பு வட்டாரங்களுக்கு கிடைப்பதில்லையா? சிலவேளை தகவல் கிடைத்தும் கோட்டைவிடுகிறார்களா?

சாதாரண பொதுமக்களின் பின்னால் சுத்தித் திரியும், புலனாய்வாளர்களும், ஒற்றர்களும் அர்ப்பணிப்போடு செயற்பட்டால் இங்கு அன்றாடம் இடம்பெறும் குற்றச் செயல்களை மட்டுப்படுத்த முடியும். வாள்வெட்டுக் கும்பல்களையும் போதைப்பொருள் கடத்தல்களையும் இல்லாதொழிக்க முடியும். ஆனால் அவ்வாறில்லாமல் குற்றங்கள் மலிந்த பூமியாக வடக்கு மாகாணம் மாறிக் கொண்டே போவதன் மர்மமென்ன? திட்டமிட்டே, அரச உயர்மட்ட ஆசிர்வாதத்துடன் தான் இந்தக் குற்றங்கள் இடம்பெறுகின்றனவா என்ற சந்தேகமும் தமிழ் மக்களிடம் பெரிதாக எழுந்துள்ளது. இந்த சந்தேகத்தை நிவர்த்திப்பவர்கள்?

-சிகா

# வீட்டின் சுவர் வீழ்ந்து ஒருவர் பரிதாபச் சாவு

நவகமுவ, கொத்தலாவல பகுதியில் வீட்டின் சுவர் இடிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்தார்.

கொத்தலாவல பாசல் மாவத்தை பகுதியில் உள்ள வீடொன்றில் சுவரே இடிந்து வீழ்ந்துள் ளது. உயிரிழந்தவரைத் தவிர மேலும் இருவர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க் கப்பட்டுள்ளனர். (ம-இ)

# இரு வீதிகள் புனரமைப்புக்கு 8 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

மானிப்பாய்,செப்.8

உள்ளூராட்சி மன்றங்களின் கட்டமைப்பு நிதியிலிருந்து வலி.தென்மேற்கு பிரதேசத்தில் 8 மில்லியன் ரூபா செலவில் சுமார் 800 மீற்றர் நீளமான இரு வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன. இதற்கான மதிப்பீட்டு வேலைகள் நிறைவடைந்துள்ளதை அடுத்து, வீதிகளின் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வலி. தென் மேற்கு பிரதேசத்தில் சுதுமலை தெற்கு பகுதியிலுள்ள 665 மீற்றர் நீளமான சிந்மய பாரதி வீதி 6.75 மில்லியன் ரூபா செலவிலும், மானிப்பாய் மேற்கிலுள்ள 135 மீற்றர் நீளமான டச்சு வீதி 2 ஆம் ஒழுங்கை 1.26 மில்லியன் ரூபா செலவிலும் புனரமைக்கப்படவுள்ளன. இதே வேளை சாந்தை கிராமத்தில் வசிக்கும் மக்களின் நலன் கருதி, நிரந்தரமான சந்தை அமைக்கப்படவுள்ளது. இதற்கான காணியைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளில் பிரதேச சபை ஈடுபட்டுள்ளது. சாந்தை சந்தை இயங்கும் காணியை விடுமாறு, காணி உரிமையாளர் பிரதேச சபைக்கு அறிவித்ததைத் தொடர்ந்து, கடந்த கூட்டத்தில் ஆராயப்பட்டது. இதையடுத்து அந்தப் பகுதியில் வசிக்கும் மக்களின் வசதி கருதி, நிரந்தமான சந்தை அமைக்கப்பட வேண்டுமென்று உறுப்பினர்கள் தெரிவித்தனர். அதனையடுத்து சந்தை அமைப்பதற்கான காணி கொள்வனவு செய்ய வேண்டுமென்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(க-115)


## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில்
அபிவிருத்தி உத்தியோகத்தராக
கடமையாற்றும்
திருமதி யசோதினி றமணன்
அவர்களின் அன்புத் தந்தை
**பொன்னையா இராசநாயகம்**
அவர்களின் மறைவுவிற்கு எமது விழிநீர்
அஞ்சலியை தெரிவித்துக்கொள்கின்றோம்

தோற்றம் 02.12.1948
மறைவு 03.09.2020

பிரதேச செயலரும்,
உத்தியோகத்தர்களும்,
உத்தியோகத்தர் நலன்புரிசங்கம்,
பிரதேச செயலகம் - வேலணை

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் ஆசிரியராக
கடமையாற்றும் ச.நவநீசன்
அவர்களின் அன்புத் தந்தை
**ச.சண்முகநாதன்**
அவர்களின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய நலன்புரி சங்கம்
யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம், உரும்பிராய்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி
அபிவிருத்தி உத்தி யோகத்தராக
கடமையாற்றும் டெசி ஜொய்சி
அவர்களது அன்புத் தந்தை
**மரியான் தமியான்
அருளாநந்தம்**
அவர்களின் மறைவிற்கு எமது விழிநீர்
அஞ்சலியை தெரிவித்துக்கொள்கின்றோம்

பிறப்பு 08.02.1935
இறப்பு 05.09.2020

நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம்,
தெல்லிப்பழை

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 23 . 05 . 1958



மறைவு 09 . 08 . 2020

**அமலநேசன் றோஸ்மலர் (புனிதம்)**

பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து
வழிகாட்டிய எங்கள் அம்மாவே
உங்கள் நினைவுகளில் மிதக்கின்றோம் அம்மா!

துயரால் பிரிவுறும்
கணவன்
பிள்ளைகள், மருமகள்
மற்றும் சகோதரர்கள்.

07, சென்செபஸ்ரியன் வீதி,
யாழ்ப்பாணம்.

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் தில்லைநாதன் கமலாசினி**

எம் குடும்ப பாச விளக்காய்
ஒரு கூட்டுக் கிளியாக
எம்மோடு வாழ்ந்து
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
8 வருடங்கள் கடந்தாலும்
நாம் எண்ணாத நாளில்லையம்மா!

கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 15 . 02 . 1939



இறப்பு 22 . 08 . 2008

அமரர்
**வீரசிங்கம் தெய்வநாயகி**
திதி: ஷஷ்டி (08.09.2020)

அன்பு, அக்கறை, அரவணைப்பு....என
நல் உணர்வுகளை எம்முள் புதைத்து
எமக்காய் தியாகங்கள் பல
புரிந்து கொண்டவரே - அம்மா!
ஈராறு வருடங்கள் கடந்துவிட்டன தமை இழந்து
தம் நினைவுகள் மட்டும் எமைவிட்டு மறையவுமில்லை
- கடக்கவுமில்லை.

"கௌரி கோட்டம்"
அல்வாய்
077 735 1803

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



**முருகேசு செல்வரத்தினம்**

விடத்தற்பளை மிருசுவிலை பிறப்பிடமாகவும் மடத்தடி கிழக்கு சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு செல்வரத்தினம் நேற்று (07.09.2020) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு சின்னம்மா தம்பதியரின் மகனும், அருளானந்தபூபதியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், கேதீஸ்வரி, சிறீக்காந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான இராசேஸ்வரி, இளையதம்பி மற்றும் சிவப்பிரகாசம் காலஞ்சென்ற நடேசபிள்ளை மற்றும் அன்னலட்சுமி, ஞானசரஸ்வதி ஆகியோரின் அன்பு சகோதரரும், சண்முகலிங்கம், நடராசலிங்கம், காலஞ்சென்ற விமலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், இன்பேஸ்வரன், தமிழினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அபிநயாவின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2020) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.30 மணியளவில் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
077 220 8377

மடத்தடி கிழக்கு, சாவகச்சேரி.

## ஆண்டு ஒன்று ஆனதம்மா நீ உதிர்ந்து

மலர்வு 18 05 1953



மலர்வு 21 08 2019

நீர்வேலியை பிறப்பிடமாகவும் மயிலிட்டியை நிரந்தர வதிவிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமாகிய

### அமரர். திருமதி. சிவபாக்கியம் வேலையா

திதி : அபரபக்க ஆவணி ஷஷ்டி - 08.09.2020

பிரிவின் வலி சுமந்து ஓராண்டு தான் கடந்த
வாழ்க்கைப் பயணத்தின் வடிவங்கள் மாறின அம்மா
அன்னையே உன்னை இழந்து தலைமை
இன்றி தவித்துவிட்டோம் இன்று
எம் நினைவெனும் ஆலயத்தில் விக்கிரகம் ஆகிவிட்டாய்
ஒவ்வொரு விடியலும் உன் நினைவுகளோடு மலரும் அம்மா...

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

அம்மா உங்கள் ஆத்மா இறைவனடியில் இங்கிதமாய்
இருக்க இறைவனை வேண்டுகின்றோம் தினமும்

தகவல் : பிள்ளைகள்

ES Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
esprintersjaffna@gmail.com 021 492 7471, 021 492 7472

## மரண அறிவித்தல்

பிறப்பு 30 • 10 • 1982



இறப்பு 07 • 09 • 2020

### திருமதி சபீனா பிரதீபன் (பாபு)

சூழாம்பதி தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பிரதீபன் சபீனா நேற்று (07.09.2020) திங்கட்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் பிரதீபனின் (பாபு) அன்பு மனைவியும், டிலானி (மாணவி-மகாஜனா) துகிஷ்ரன், நர்சிகா ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற முருகேசுராசா மற்றும் மகேஸ்வரி (சின்னப்பிள்ளை) தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், சஞ்சீவன் லக்ஷ்மனா (லக்கி-ஆஸ்திரேலியா), டக்சாஜன் (டச்சா), சஜீவன் (ஐக்கிய அமெரிக்கா), சர்மிக்கா (சர்மி) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற நாணு, அன்னம்மா ஆகியோரின் பாசமிகு மருமகளும், ஜனகா, ராதா (சின்னத்தங்கா), ராணி, பராசக்தி, லீலா, தங்கா, காலஞ்சென்றவர்களான மலர், நகுலாம்பிகை, சிவசுப்பிரமணியம் மற்றும் சிவலிங்கம், காலஞ்சென்ற சிவகுருநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2020) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11.00 மணியளவில் தெல்லிப்பழை கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
ரவி - 077 810 1342
டச்சா - 077 984 7467

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

மண்ணில் 16 • 10 • 1931



விண்ணில் 06 • 09 • 2020

### திருமதி றோஸ்மேரி தெரேசா அல்பிரட்

ஊ/கரம்பொன்னைப் பிறப்பிடமாகவும், மு/அளம்பிலை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி றோஸ்மேரி தெரேசா அல்பிரட் கடந்த (06.09.2020) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் சேர்ந்து விட்டார்.

அன்னார் கரம்பொனைச் சேர்ந்த காலஞ்சென்ற சுவாம்பிள்ளை செபமாலை, மேரி மாகிறேற் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், அருட்சகோ. யுடொக்சி தி.கு.க (பாஷையூர்) அவர்களின் அருமைச் சகோதரியும், சில்வேஷ்ரர் செபஷ்ரியனின் ஒன்று விட்ட சகோதரியும், காலஞ்சென்ற அன்ரனி பிரான்சிஸ் அல்பிரட் (சில்லாலை) அவர்களின் பாசமிகு மனைவியும், அன்ரனி ஜெயராசா (டென்மார்க்), பேரின்பமரியதாஸ், ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி நொயலா எல்சி கிரிதரன், திருமதி டெல்பின்ரா நிறோஜி T.டிஷான், மேரி எல்வீனா, அனோ ஷ்றெபாணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திருமதி மரீனா விமலராணி, திருமதி யோசேப்பின் செல்வராணி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நான்சி யாசிக்கா, இம்மனுவலா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல், கொழும்புத்துறை புனித யோசவ் முதியோர் இல்ல மண்டபத்தில் நாளை (09.09.2020) புதன்கிழமை காலை 8.00 மணிமுதல் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, அன்று பிற்பகல் 3.00 மணிக்கு இரங்கல் திருப்பலி, இறுதிச்சடங்குகளின் பின், நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அருட்சகோதரி யுடொக்சியும் தி.கு.க.
குடும்பத்தினரும்.

## மரண அறிவித்தல்

மண்ணில் 08 • 11 • 1990



விண்ணில் 03 • 09 • 2020

### ஹரிக்கிருஷ்ணா தனபாலசிங்கம் (கஜன்)
(Civil Engineer)

கிளிநொச்சி பளை கச்சார்வெளியைப் பிறப்பிடமாகவும், கனடா Whitchurch- Stouffville ஐ வதிவிடமாகவும் கொண்ட **ஹரிக்கிருஷ்ணா தனபாலசிங்கம் (கஜன்)** 03-09-2020 வியாழக்கிழமை கனடாவில் அகாலமரணம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான **நல்லையா செல்வராணி** தம்பதிகள், **வீரகத்தி பூரணம்** தம்பதியரின் ஆசைப் பேரனும், காலஞ்சென்ற **தனபாலசிங்கம்** மற்றும் **மங்கையற்கரசி** தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், **ஜெயரூபன், சந்திரா** தம்பதிகளின் அருமை மருமகனும், **சபீதாவின்** ஆருயிர்க் கணவரும், **மலர்விழி** (மாலதி - பிரான்ஸ்), **ஜெயமாலினி** (மாலினி - பிரான்ஸ்), **ஜெயதீபன்** (தீபன்-கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், **சிறீஷ்கந்தராஜா** (சிறி - பிரான்ஸ்), **விஜயரூபன்** (விஜயன்-பிரான்ஸ்), **சதாலட்சுமி** (சதா - கனடா), **வினோத்** (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், **கஜீதன்** (பிரான்ஸ்), **ரேணுஜன்** (பிரான்ஸ்), **ஜிலக்ஷி** (பிரான்ஸ்), **சரண்** (பிரான்ஸ்), **சகீரன்** (பிரான்ஸ்),**சாரகி** (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாய் மாமனாரும், **தட்ஷா** (கனடா), **தக்ஷயா** (கனடா), ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பார்வைக்கு Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada வைக்கப்பட்டு நாளை (09.09.2020) புதன்கிழமை காலை 8.30 - முற்பகல் 11.30 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நல்லையா ஜெயவீரசிங்கம்
(தங்கன் - சித்தப்பா-சாவகச்சேரி)
077 693 3255

தொடர்புகளுக்கு:

| | | |
|---|---|---|
| மங்கை | (கனடா - | 0014 3777 79098) |
| தீபன் | (கனடா - | 0014 1690 36998) |
| விஜயன் | (பிரான்ஸ் - | 0033 6151 45567) |
| சிறி | (பிரான்ஸ் - | 0033 6518 22745) |

# நெற்செய்கைக் கூட்டம் இன்றிலிருந்து நாளாந்தம் ஒவ்வொரு பிரிவுகளிலும்

## முதற் கூட்டம் இன்று உசனில்

கொடிகாமம், செப். 8

2020 /2021 நெற் செய்கைக்கான காலபோகக் கூட்டம் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் கீழ் குறிப்பிட்ட இடங்களில் நடைபெறவுள்ளது. இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஜே/329 உசன் பிரிவுக்குரிய கூட்டம் உசன் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஜே/306 நுணாவில் கிழக்கு பிரிவுக்கு நுணாவில் கிழக்கு சனசமூக நிலையத்தில் நாளை புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஜே/305 கல்வயல் பிரிவுக்கு கல்வயல் பொது நோக்கு மண்டபத்தில் நாளைமறுதினம் வியாழக் கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. ஜே/340 மாசேரி பிரிவுக்கு மாசேரி பொது நோக்கு மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கும், ஜே/344 தாவளை இயற்றாலை பிரிவுக்கு தாவளை இயற்றாலை பொதுநோக்கு மண்டபத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கும், ஜே/337 குடமியன் பிரிவுக்கு குடமியன் பொதுநோக்கு மண்டபத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கும்,

ஜே/343 வரணி இயற்றாலை பிரிவுக்கு வரணி இயற்றாலை கலைவாணி சனசமூக நிலையத்தில் எதிர்வரும்16ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கும் நடைபெறவுள்ளது. (கு-159)


### பாராட்டி வாழ்த்துகிறோம்



யா/ஆனைக்கோட்டை
பாலசுப்பிரமணிய வித்தியாலய
அதிபர்
**திரு. வேலாயுதம் சிவசக்திவேல்**
(BA-Sci.Tra)

Congratulations

அவர்கள் இலங்கை அதிபர் சேவையின் தரம் I க்கு (SLPS - I) பதவி உயர்வு பெற்றமைக்கு மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

**ஆசிரியர் நலன்புரி கழகம்**
**யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம். ஆனைக்கோட்டை.**

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### கலைப்பீட நான்காம் வருட
### முதலாம் அரையாண்டுப் பரீட்சை 2018

கலைப்பீடத்தின் நான்காம் வருட முதலாம் அரை யாண்டுப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 07.09.2020ஆம் திகதி முதல் 09.09.2020ஆம் திகதி வரை கலைப் பீடாதிபதி அலுவலகத்தால் ஏற்றுக்கொள்ளப்படும்.

மீள் பரீட்சார்த்திகள் ஒரு பாட அலகிற்கு மீள் பரீட்சைக் கட்டணமாக ரூபா 250/= வீதம் பல்கலைக்கழக காசா எரிடமோ, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப் பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

**# மாணவர்கள் பரீட்சை அனுமதி அட்டையினை 11ஆம் திகதி கலைப்பீடாதிபதி அலுவலகத்தில்** பெற்றுக் கொள்ளலாம்.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
07.09.2020

### வேலைக்கு ஆள்கள் தேவை

ஸ்கை ரோஸ் பான்சி கடைக்கு அனுபவமுள்ள வேலையாள்கள் (ஆண், பெண் இருபாலாரும்) தேவை.

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 076 646 1089

### உடனடி வேலைவாய்ப்பு

இலங்கையின் முன்னணி Ready mix concrete உற்பத்தி நிறுவனமான Tokyo supermix (pvt) ltd யாழ்ப்பாணக்கிளையில் பின்வரும் பதவி வெற்றிடத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தொழில்நுட்ப உத்தியோகத்தர்**

**தகைமைகள்**

1. NVQ-5/NCT- குடிசார் எந்திரவியல்
2. குறைந்தது ஒருவருட முன் அனுபவம்
3. சிங்கள மொழியில் பேசும் திறன்
4. மிருசுவிலில் இருந்து 30km க்குட்பட்ட வதிவிடத்தை கொண்டிருத்தல்
5. செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரத்தை கொண்டிருத்தல்

தகுதியானவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையினை கீழ்க்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

**se.jaffnarmc@tokyocement.lk**

Tokyo supermix (pvt) ltd
எழுதுமட்டுவாழ் தெற்கு,
மிருசுவில், யாழ்ப்பாணம்.

### நாஹா மருத்துவ நிலையம்

கை, கால் அதிக விறைப்பு, வீக்கம் செயலிழப்பு, முழங்கால்வாதம் பாரிசவாதம், தீராத புண்கள், அல்சர்,பெண்ணியல் நோய்கள் சிறப்புச் சிகிச்சை

வங்கி முன்லேன்
சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி
(ஜெகபதிவீடு), மானிப்பாய்.
077 321 2740

### பெயர் மாற்றம்

அணைக்கட்டு வீதி, கண்ணகைபுரம், கிளிநொச்சியில் வசித்துவரும் **திருமதி சின்னையா பிரலாபதி** என்னும் எனது பெயரை **திருமதி சின்னையா சரஸ்வதி** என பெயர் மாற்றம் செய்கின்றேன். இனிவரும் காலங்களில் எவ்வகை ஆவணத்திலும் இவ்வாறே கையெப்பம் இடுவேன் என தெரியப்படுத்துகின்றேன்.

சி. சரஸ்வதி







## இணுவில் திருப்பதி அருள்மிகு ஸ்ரீ வேங்கடேஸ்வரர் ஆலயம்
## கிருஷ்ணஜெயந்தி உறியடி உற்சவம்

### 09. 09.2020 புதன்கிழமை



- காலை : 5.00 பெரிய பெருமாள் திருமஞ்சனம்
- காலை : 7.30 பெருமாள் அடியார்களுக்கான தர்சனம் ஆரம்பம், விசேட திருவாராதனை தொடர்ந்து அடியார்கள் 108 முறை திரு வீதிவலம் வரும் வேண்டுதல் ஆரம்பம்
- மதியம் : 12.00 மணிக்கு விசேட பூஜை
- மாலை : 5.00 மணிக்கு பூஜை ஆரம்பம்

**மாலை 5.30**

ஸ்ரீ வெங்கடேஷ்வரபெருமாள் நவநீத கிருஷ்ணராக சர்ப்பசேவையில் கருவறையில் இருந்து உறியடி உற்சவ புறப்பாடும் திரு வீதிவலமும்

**தொடர்ந்து உறியடி உற்சவம்**

- மாலை : 6.40 குமாட வீதி சிறப்புதிருவமுது ஆராதனை நைவேத்தியம்
- மாலை : 6.45 முதல் இசை நாட்டிய சமர்ப்பணம் – வீணாகானசமர்ப்பணம்
- இரவு : 8.30 சுவாமி ஆலயம் திரும்புதல்
- இரவு : 8.45 பெருமாள் திருத்தொட்டில் சேவை, தாலாட்டு
- இரவு : 9.00 உற்சவநிறைவு

**தொடர்ந்து நள்ளிரவு 12.00 மணிவரை அபிஷேகம் ஆராதனை அடியார்களுக்கு காயநைவேத்தியம் வழங்குதல் தொடர்ந்து நித்திரை விழிப்புவழிபாடு**

**10.09.2020 அதிகாலை 5.00 தீர்த்தம், சக்கரதிருமஞ்சனம்**

**காலை 6.00 விரதபூர்த்தி**

**19.09.2020 சனிக்கிழமை**

**முதலாவது புரட்டாதி சனிவார உற்சவம், பிரமோற்சவ ஆரம்பம். கொடியேற்றதினம்**

ஆலயதர்மகர்த்தா
உபயகாரர்

தொ.பே.இல. 077 725 2476

### பிளாய்ட்டுக்கு நீதி கோரிய போராட்டத்தில்

# அமெ. பொலிஸார் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் குண்டுமழை

### 50க்கும் மேற்பட்டோர் கைது





அமெரிக்கப் பொலிஸாரால் கொல்லப்பட்ட ஜோர்ஜ் பிளாய்ட்டுக்கு நீதி கோரி போர்ட்லாண்டில் இடம்பெற்று வரும் போராட்டங்கள் 100 நாட்களைக் கடந்துள்ளன. இந்நிலையில் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற 100ஆவது நாள் போராட்டத்தில், போராட்டக்காரர்கள் பொலிஸார் மீது பெற்றோல் குண்டுத்தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இதற்காக உள்ளூர்ப் பொருள்களைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட குண்டுகள், கற்கள், மோட்டார் பற்றிகள் என்பவற்றை அவர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

இதன்போது 59 போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கட்டுப்படுத்த கண்ணீர்ப்புகைத் தாக்குதலை நடத்தப்பட்டது எனவும் போர்ட்லாண்ட் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்தவார இறுதியில் போர்ட்லாண்டில் இடம்பெற்ற போராட்டத்தில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## ரஷ்ய கொரோனா தடுப்பூசி: இவ்வாரம் பயன்பாட்டில்

ரஷ்யாவின் கொரோனாத் தடுப்பூசியான ஸ்புட்னிக்5 தடுப்பூசி இந்த வாரம் பொது மக்கள் பயன்பாட்டுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கொரோனா வைரஸ் நோய்க்கான தடுப்பூசியை உருவாக்கிய முதல் நாடு என்று ரஷ்யா உலக நாடுகளுக்கு அறிவித்தது. இந்நிலையில் ரஷ்ய சுகாதாரத் துறை அதிகாரிகள் கொரோனாத் தடுப்பூசி இந்த வார தொடக்கத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக வெளியிடப்படும் என்று தெரிவித்துள்ளனர். (வ)


## துயர் பகிர்கின்றோம்



கல்லூரி ஆசிரியர் திரு.சி.சிவகுமார் அவர்களின் பாசமிகுதாயார்

**திருமதி இரத்தினபூபதி சின்னையா**

அவர்கள் நேற்று (07.09.2020) திங்கட்கிழமை இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி யடையவும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**வட்டமேசை**
**யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### சபாபதி சண்முகராசா

சிமேந்து கூட்டுத்தாபன பாதுகாப்பு உத்தியோகத்தர்



பிறப்பு 11.01.1947 இறப்பு 21.08.2019

திதி-தேய்பிறை ஷஷ்டி

பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து
வழிகாட்டிய எங்கள் அப்பாவே!
உங்கள் நினைவுகளில்
மிதக்கின்றோம் அப்பா!

**குடும்பத்தினர்.**

**பழைய வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.**

## மரண அறிவித்தல்



பிறப்பு 17 . 03 . 1941
இறப்பு 07 . 09 . 2020

### பிரம்மஸ்ரீ ஞானபண்டிதக்குருக்கள் சபாரட்ணசர்மா

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரம்மஸ்ரீ ஞானபண்டிதக்குருக்கள் சபாரட்ணசர்மா நேற்று (07.09.2020) திங்கட்கிழமை சிதம்பரேஸ்வரர் கழலடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் அமரர்களான ஞானபண்டிதக் குருக்கள் இரத்தினம்மா தம்பதிகளின் ஏகபுத்திரனும் அமரர்களான சுருவில் நடராஜக்குருக்கள் யோகாம்பாள் தம்பதியினரின் மருமகனும் வடிவாம்பிகை அம்மாவின் அன்புக் கணவரும், புவனேஸ்வரியின் (கீரிமலை) அன்புச் சகோதரனும், சுந்தரமூர்த்திசர்மாவின் (கீரிமலை) அன்பு மைத்துனரும், வைதேகி (மலேசியா), வாசுதேவக்குருக்கள் (குருபீடாதிபதி-வீணாகான குருபீடம்), மாதினி (லண்டன், முன்னாள் அபிவிருத்தி உத்தியோகத்தர்-வலி தென்மேற்குப் பிரதேசசபை) உமாபதிசர்மா (அபிவிருத்தி உத்தியோகத்தர் MOH Office பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்தானகோபாலக் குருக்கள் (மலேசியா), சாருலதா, முரளீதரசர்மா (லண்டன்), வாசுகி (முகாமைத்துவ உத்தியோகத்தர்-ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை) ஆகியோரின் அன்பு மாமனாரும், ரவிசங்கர்சர்மா, உதயசங்கர்சர்மா, ஜீவசங்கர்சர்மா, ஆகியோரின் அன்புத் தாய்மாமனும், சைலேந்திரசர்மா, சஸ்வினி, சைந்தவி, சிவாத்மிகா, சிவானுகா, சிவானுஜன்சர்மா, ஸ்ரீநயா, ஸ்ரீநிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2020) செவ்வாய்க்கிழமை காலை 09.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிவன் கோவிலடி,**
**சித்தன்கேணி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



பிறப்பு 10 . 04 . 1946
இறப்பு 07 . 09 . 2020

### திருமதி சின்னையா இரத்தினபூபதி

கச்சாய் வடக்கை பிறப்பிடமாகவும் வெள்ளாம்போக்கட்டி கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னையா இரத்தினபூபதி நேற்று (07.09. 2020) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்

அன்னார் காலஞ்சென்ற சின்னையாவின் மனைவியும் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான நீலையினார் சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமளும், கர்லஞ்சென்றவர்களான சிவகாமிப்பிள்ளை, கமலாதேவி மற்றும் இராமநாதன், யோகநாதன், பத்மநாதன் ஆகியோரின் அருமைச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நடராசா, இறஞ்சிதமலர், சிதம்பரப்பிள்ளை மற்றும் செல்லம்மா, இராசம்மா, வாசுகி ஆகியோரின் அன்புமைத்துனியும் சிவயோகம் (ஆசிரியர், யா/விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம்) காலஞ்சென்ற சிவராசா மற்றும் சிவசாந்தினி (ஆசிரியர், யா/மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்) சிவகுமார் (ஆசிரியர், யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), காலஞ்சென்ற சிவசங்கர் ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராசவினாயகம், மகேந்திரகுமார் (ஆசிரியர் யா/அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம்), சுகந்தினி (ஆசிரியர் யாழ்.மத்திய கல்லூரி), யோகம்மா ஆகியோரின் அன்பு மாமியாரும், அர்ச்சனா,அகலிஷன், வீணஜா, விதுசனா, சாருகா, விதுசிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2020) செவ்வாய்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கச்சாய் எறியால்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 322 2673 - **சிவகுமார்**
077 289 8117 - **சிவயோகம்**
077 949 8610 - **சிவசாந்தினி**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## வெளிவாரி...

கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளதாவது;
தற்போதுள்ள கலைப் பட்டப் படிப்புகள் நீண்ட காலமாக புதுப்பிக்கப்படாததால் பட்டம் பெற்ற மாணவர்கள் வேலை தேடும்போது சிரமங்களை எதிர்கொள்கின்றனர். தற்போதைய வேலைச் சந்தையில் கவனம் செலுத்தி எதிர்காலத்தில் வெளி பட்டப்படிப்புகளுக்கு புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.
தற்போதுள்ள பாடங்களை ஆய்வு செய்ய நிபுணர் குழுவை நியமிக்கவும், வெளிவாரி கலை பட்டப் படிப்பின் கீழ் புதிய பாடங்களை அறிமுகப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் வேலை வாய்ப்பை மையமாகக் கொண்டு வெளிவாரிப் பட்டப்படிப்புகளுக்கு புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.
வெளிவாரி கலைப் பட்டப்படிப்பு தொடர்பான பாடத்திட்டங்கள் நீண்ட காலமாக புதுப்பிக்கப்படாததால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக பல மாணவர்கள் ஒரு சில பாடங்களை மட்டுமே படிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.
தொழிலாளர் சந்தைக்கு ஏற்றவாறு பட்டதாரிகளைத் தயார்படுத்துவதற்காக மூன்றாம் நிலைக் கல்வி முறையை மறுசீரமைக்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பல்கலைக்கழக நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.
தற்போது இலங்கை பல்கலைக்கழகங்களால் நடத்தப்படும் முகாமைத்துவம் மற்றும் அறிவியல் உள்ளிட்ட பிற வெளிவாரிப் பட்டப்படிப்புகளுக்கான பதிவு நிறுத்தப்படவில்லை. வெளிவாரி கலை பட்டப்படிப்பு பதிவு இடைநிறுத்தப்பட்டுள்ளது. என்றார். (எ-இ)

## மூடையுடன்...

ளர் காவு வண்டி மூலம் மந்திகை மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டார். மருத்துவர்கள் பரிசோதனை செய்தபோது அவர் ஏற்கனவே உயிரிழந்திருந்தார்.
அதேவேளை, அங்கு வந்த உறவினர்கள் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த உடலைப் பார்க்க அனுமதிக்கப்பட்டது. அவர்கள் உடல் மீது விழுந்து அழுத போது, உடலில் உயிர் உள்ளது, அசைவு இருக்கின்றது என்று தெரிவித்து மருத்துவமனையில் குழப்பத்தில் ஈடுபட்டனர். உடலில் உயிர் இருப்பதை மருத்துவர்கள் கவனிக்கவில்லை என்றும் குழப்பத்தில் ஈடுபட்டனர்.
இது தொடர்பாக வைத்தியசாலை மருத்துவ அதிகாரி மருத்துவர் வே.கமலநாதனிடம் கேட்டபோது, 1990 அவசர நோயாளர் காவு வண்டி ஊடாகவே இவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அப்போதே உடலில் உயிர் இல்லை என்றே எமக்கு அறிக்கையிடப்பட்டது. வெளிநோயாளர் பிரிவில் இருந்த மருத்துவரும் பரிசோதனை செய்து, உடலில் உயிர் இல்லை என்பதை உறுதிப்படுத்தியிருந்தார். அதன்பின்னரே உடற்கூற்றுப் பரிசோதனைக்காக பிரேத அறையில் உடல் வைக்கப்பட்டது.
மனிதாபிமான அடிப்படையில் உறவினர் உடலைப் பார்க்க அனுமதிக்கப்பட்டது. அவர்கள் தவறான புரிதலின் அடிப்படையில் குழப்பங்களை ஏற்படுத்தினர். அவர்கள் அங்கிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களையும் தாக்க முயன்றனர். அதையடுத்து பொலிஸாரை அழைத்து நிலைமையைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. என்றார். (எ26,108)

## தங்கத்துக்கான...

ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.
இது தொடர்பாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;
இந்த உத்தரவு திங்கட்கிழமை (நேற்று) முதல் பிறப்பிக்கப்பட்டுள்ளது. 1971ஆம் ஆண்டு முதல் மாணிக்கம் மற்றும் நகைத் தொழிலுக்கு வழங்கப்பட்ட வருமான வரிச் சலுகை 2017 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட வருமான வரிக் கொள்கையால் நீக்கப்பட்டது.
அதையடுத்து 2018ஆம் ஆண்டு தங்க இறக்குமதிக்கு 15 வீத வரி விதிக்கப்பட்டது. இந்த வரிகள் நகைகளின் விலை உயர்வுக்குக் காரணமாக அமைந்துள்ளன.
சம்பந்தப்பட்ட வரிகளை உடனடியாக நீக்க வேண்டும் என்றும், மாணிக்கம் உற்பத்தி மேம்பாட்டுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார் என்று உள்ளது.
இதனால், தங்கத்தின் விலையில் வீழ்ச்சி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது என்று தங்க விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ-இ)

## தமிழ்...

இவ்வாறு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் இராஜாங்க அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழர்களின் தேவை சுயநிர்ணய ஆட்சி என்றால் வடக்கு, கிழக்கு பிரதேசங்களுக்கு வெளியில் வாழும் தமிழர்கள் குறித்து தமிழ் அரசியல் தலைவர்களின் நிலைப்பாடு என்ன?
சிங்களப் பகுதிகளில் உள்ள தமிழர்களை வெளியேற்ற வேண்டும் என்றா கூற வருகின்றனர்? சம்பந்தன், விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் போன்றவர்கள் இதனையா எதிர்பார்க்கின்றனர்? முதலில் இந்தக் கேள்விக்கு அவர்கள் பதில் தெரிவிக்க வேண்டும்.
நாடாளுமன்ற உறுப்பினர்களான சம்பந்தன், விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் ஆகியோர் இன்னமும் பிரிவினைவாதக் கொள்கையில் உள்ளனர். அவர்கள் இன்னொரு போருக்குத் தயாராக உள்ளனர். எனவே ராஜபக்ச படைகளாகிய நாமும் போருக்குத் தயாராகவே உள்ளோம். அவர்களுக்கு அவர்களின் பாணியில் தக்க பதிலடியை வழங்க எந்நேரமும் நாம் தயாராகவே இருக்கின்றோம்.
மக்கள் பிரதிநிதிகள் என்ற திமிருடன் இந்த மூவரும் செயற்படுகின்றார்கள். அவர்கள் திருந்த வேண்டும். இல்லையேல் நாமே அவர்களைத் திருத்த வேண்டி வரும். அது எந்த வழியில் என்பது அவர்களின் செயற்பாடுகளில்தான் தங்கியுள்ளது - என்றார். (எ-22)

## விபத்தில்...

துள்ளது. யாழ்ப்பாணத்தில் இருந்து தெல்லிப்பழை நோக்கிப் பயணித்த சவீனா, கோண்டாவில் சந்திப் பகுதியில் சைக்கிள் ஒன்று குறுக்கே வந்ததால் தீடீரென மோட்டார் சைக்கிளை நிறுத்தி யுள்ளார். அதில் அவரது தலைக்கவசம் கழன்ற நிலையில், கீழே தடுமாறி விழுந்துள்ளார். அதில் அவருக்குத் தலையில் காயம் ஏற்பட்டு மயக்கமடைந்தார்.
அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவர் அங்கு தொடர்ச்சியாகச் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், சிகிச்சை பயனின்றி நேற்றுக் காலை உயிரிழந்தார்.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். (எ26,20)

## பல்கலை...

வால் த.சிவாராஜாவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவை உறுப்பினராக கலாநிதி சுரேன் ராகவன் நியமிக்கப்பட்டிருந்த போதும், அவருக்கு பேரவைக் கூட்டங்களில் பங்கேற்க சந்தர்ப்பம் கிட்டவில்லை. (எ)

## எண்ணெய்...

ணெய்க் கப்பலில் மீண்டும் நேற்று மாலை தீப் பிடித்துள்ளது.
இந்தத் தகவலை இலங்கைக் கடற்படையின் செய்தித் தொடர்பாளர் கப்டன் இந்திய டி சில்வா தெரிவித்தார்.
முன்னர் பரவியிருந்த தீ இலங்கை மற்றும் இந்தியக் கடற்படையினரின் பெரும் முயற்சியில் அணைக்கப்பட்டது. அந்தக் கப்பல் சங்கமன்கண்டி கடற்பரப்பில் 30 மைல் தொலைவில் தற்போது நங்கூரமிட்டுள்ளது.
இந்த நிலையில் மீண்டும் நேற்றுமாலை அந்தக் கப்பலில் தீப் பிடித்துள்ளது. அந்தப் பகுதியில் வீசும் உஷ்ணமான காற்றின் காரணமாகவே கப்பலில் மீண்டும் தீப் பிடித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.
இலங்கை கடற்படை மற்றும் விமானப் படை, இந்திய கடற்படை மற்றும் கடலோர காவல் படை, பிற பங்குதாரர் கப்பல்கள், மற்றும் விமானங்கள் என்பன இணைந்து தீயை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கத்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

## 1379 கிலோ..

மஞ்சள் பொதிகள் கடத்தி வரப்பட்டு உப்பு பைக்கற் மற்றும் இதர பொருள்களுடன் மறைத்து நீர்கொழும்புக்கு வாகனத்தில் கொண்டு செல்லப்பட்டபோதே பொலிஸார் அவற்றைக் கைப்பற்றினர். அவற்றைக் கடத்திய குற்றச்சாட்டில் ஒருவரைக் கைதுசெய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
42 வயதுடைய அவர் மன்னார் உப்புக்குளம் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸால் இணைந்து இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் என்று மன்னார் பொலிஸார் தெரிவித்தனர். (கு-213)

## 20 ஆவது...

என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றக்குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.
ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்று மாலை கொழும்பில் நடைபெற்றது.
அதில் அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டமூலம் உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.
'20'க்கு எவ்வித நிபந்தனையும் இன்றி கடும் எதிர்ப்பை வெளியிட வேண்டும் என்ற யோசனையை மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரண முன்வைக்க, அதனை குருணாகலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க வழிமொழிந்துள்ளார். அதையடுத்து தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.
அனைத்து சக்திகளையும் திரட்டி 20க்கு எதிராக போராடுவதற்கும், அதற்கு எதிராக நாடாளுமன்றத்தில் வாக்களிப்பதற்கும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. (எ-44)



## சித்தார்த்தனுக்கு தென்மராட்சியில் வரவேற்பு

சாவகச்சேரி, செப். 8
நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட த.சித்தார்த்தனுக்கு தென்மராட்சி கிழக்குக் பிரதேச மக்கள் நேற்றுமுன்தினம் வரவேற்பு விழாவை நடத்தினர்.
இந்நிகழ்வில் நாடாளுமன்றுக்குத்தன்னைத் தெரிவுசெய்வதற்கு பிரதேச மக்கள் வழங்கிய ஒத்துழைப்புக்கு சித்தார்த்தன் நன்றியைத் தெரிவித்தார். வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கஜதீபனும் நிகழ்வில்கலந்துகொண்டார். (ம-9,159)

## உயரத்தில்...

உடனே வெளிநாட்டில் நடந்திருக்கும் என்ற எண்ணம் உங்களுக்குத் தோற்றியிருக்கும். ஆனால் மாத்தறை, ஹன்மன வீதியில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.
பட்டத்தின் நூல் ஒன்றில் சிக்கிய நிலையில் உயரமான தண்ணீர் தாங்கி ஒன்றில் புறா வாழ்வுக்கும் சாவுக்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருந்தது.
அதைக் கண்ட விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர், வனவிலங்குத் திணைக்கள அலுவலகத்துக்குத் தகவல் கொடுத்தார். அங்கு வந்த பார்த்த வனவிலங்குத் திணைக்களத்தினர் அந்த உயரமான நீர்த் தாங்கியில் ஏற முடியாததால் தங்கள் முயற்சியைக் கைவிட்டனர்.
மறுநாள் மாத்தறை நகர சபை மேயரைத் தொடர்பு கொண்டார் அந்த விவசாயத் திணைக்கள அதிகாரி. உணவு, நீர் இன்றி அந்தப் புறா இறக்கும் அபாயத்தில் இருப்பதைச் சுட்டிக்காட்டினார்.
மாத்தரை நகர சபை மேயர் உடனடியாக நடவடிக்கை எடுத்தார். தீயணைப் பிரிவு அந்த இடத்துக்கு உடனடியாக அனுப்பப்பட்டது. இந்த நடவடிக்கையில் மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபை, மாவட்டச்செயலகம், மாத்தறை நகரசபை, நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை, பெட்ரோலியம் கோர்ப்பரேஷன், வீதி அபிவிருத்தி அதிகார சபை, மகா நிறுவனம், பிரதேசத்திலுள்ள தன்னார்வலர்கள் எனப் பலரும் உற்சாகமாக இணைந்தனர்.
ஏணி உயர்த்தப்பட்டு தண்ணீர் தாங்கியில் சிக்கியிருந்த புறா பத்திரமான மீட்கப்பட்டது. புறா மீட்கப்பட்டதும் அங்கு கூடியிருந்த அனைவரும் கைதட்டி மகிழ்ச்சியின் உச்சத்தில் ஆரவாரித்தனர். (எ-இ)

# ஆஸிக்கு பலத்த அடி இங்கிலாந்து வெற்றி

லண்டன், செப்.8

**ஆஸ்திரேலியா – இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ரி– 20 போட்டியிலும் இங்கிலாந்து வெற்றியீட்டியதன் மூலம் 2– 0 என்ற கணக்கில் ரி20 தொடரைக் கைப்பற்றியது. இதனால் ஆஸ்திரேலியா அணி மீண்டும் தோல்வியைச் சந்திக்க நேர்ந்தது.**




ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் மூன்று போட்டிகள் கொண்ட ரி20 கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற முதல் போட்டியில் இங்கிலாந்து 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

2 ஆவது போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. முதலில் ஆஸ்திரேலியா துடுப்பாட்டத் தைத் தெரிவு செய்தது. ஆரம்பத் துடுப்பாட்டக்காரர்களாகக் களமி றங்கிய வோர்னர் ஓட்டம் ஏதும் எடுக்காமலும், அலேக்ஸ் கேரி 2 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். இதனால் 3 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 2 விக்கெட்டுகளை ஆஸ்திரேலியா இழந்தது. கப்டன் ஆரோன் பிஞ்ச் 33 பந்தில் 40 ஓட்டங்களும், மார்கஸ் ஸ்டாய்னிஸ் 26 பந்தில் 35 ஓட்டங்களும், மேக்ஸ்வெல் 18 பந்தில் 26 ஓட்டங்களும் எடுத்தனர்.

பேட் கம்மின்ஸ் 5 பந்தில் 13 ஓட்டங்களும், ஆஷ்டோன் அகர் 20 பந்தில் 23 ஓட்டங்களும் பெற, ஆஸ்திரேலியா 20 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகள் இழப்புக்கு 157 ஓட்டங்களை எடுத்தது.

பின்னர் 158 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் இங்கிலாந்து களம் இறங்கியது.

தொடக்க வீரரான பேர்ஸ்டோவ் 9 ஓட்டங்களில் வெளியேறினார். அடுத்து ஜோஸ் பட்லருடன் தாவித் மலன் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. தாவித் மலன் 32 பந்தில் 42 ஓட் டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

பட்லர் 54 பந்தில் 77 ஓட்டங்கள் எடுத்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார் . அதன் பின்னர் ஓரிரு இலக்குகள் சரிய இங்கிலாந்து 18.5 பந்துப் பரிமாற்றங்களில் 158 ஓட்டங்கள் எடுத்து 6 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ரி20 தொடரை 2:0 என்ற கணக்கில் கைப்பற்றி இங்கிலாந்து முன்னிலையில் உள்ளது. 3 ஆவது மற்றும் கடைசி ரி20 ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. (ற)

# ஜோகோவிச் தகுதிநீக்கம்

நியூயோர்க், செப்.8

அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் போட்டியிலிருந்து உலகின் முதல் நிலை வீரரான ஜோகோவிச் தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடைபெற்றுவருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 4 ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் முதல் நிலை வீரரும், 17 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றவருமான நோவக் ஜோகோவிச் (சேர் பியா), தரவரிசையில் 27 ஆவது இடத்தில் இருக்கும் ஸ்பெயின் வீரர் பாப்லோ காரெனோ பஸ்டாவைச் சந்தித்தார்.

ஆட்டம் ஆரம்பித்தது முதல் ஜோகோவிச் தடுமாற்றத்துடன் ஆடினார். இதனால் முதல் செட்டில் அவர் புள்ளிகளை இழக்க நேர்ந்தது. இதனால் விரக்தியுடன் ஆடிய ஜோகோவிச் பந்தைத் தரையில் வேகமாக அடித்தார். அந்தப் பந்து அங்கிருந்த நடுவரின் மீது பட்டதில் அவர் காயமடைந்தார். இதனால் பதறிப்போன ஜோகோவிச் அவரிடம் மன்னிப்பு கேட்டதுடன் நிலைமையை விளக்கிக் கூறினார்.

ஆனாலும் போட்டி விதிகளின் படி ஜோகோவிச் அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் போட்டியிலிருந்து தகுதிநீக்கம் செய்யப்பட்டார். இதையடுத்து, ஸ்பெயின் வீரர் பாப்லோ காரெனோ பஸ்டா காலிறுதிக்கு முன்னேறினார். (ற)



## பெண்களுக்கான பளுதூக்கலில்
# யாழ்ப்பாணப் பிரதேச செயலகம் சம்பியன்



யாழ்ப்பாணம், செப்.8

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான பெண்களுக்கான பளுதூக்கலில் யாழ்ப்பாணப் பிரதேச செயலக அணி சம்பியனானது. இந்தப் பளுதூக்கல் போட்டி யாழ் துரையப்பா விளையாட்டு மைதான பளுதூக்கும் திடலில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. இதில் யாழ்ப்பாணப் பிரதேச செயலக அணியினர் 4 தங்கப் பதக்கங்கள், 6 வெள்ளிப் பதக்கங்கள், 3 வெண்கலப் பதக்கங்கள் உட்பட 13 பதக்கங்களைக் கைப்பற்றிச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தனர். உடுவில் பிரதேச செயலக அணியினர் 3 தங்கப் பதக்கங்கள், ஒரு வெள்ளிப் பதக்கம் உட்பட 4 பதக்கங்களைக் கைப்பற்றி இரண்டாமிடத்தைக் கைப்பற்றினர். (ற-422)

# பரு.பிரதேச செயலகம் புதிய சாதனை

பருத்தித்துறை, செப்.8

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான பளுதூக்கல் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியினர் சம்பியன் பட்டத்தை வென்று புதிய சாதனையைப் பதிவுசெய்தனர். இந்த ஆண்களுக்கான பளுதூக்கல் போட்டிகள் யாழ் துரையப்பா விளையாட்டு மைதான பளுதூக்கும் திடலில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியினர் 5 தங்கப்பதக்கங்கள், 4 வெள்ளிப் பதக்கங்கள், 3 வெண்கலப் பதக்கங்கள் உட்பட 12 பதக்கங்களைக் கைப்பற்றி சம்பியன் பட்டத்தை வென்றனர். யாழ் பிரதேச செயலக அணியினர் ஒருதங்கம், ஒருவெள்ளி, ஒருவெண்கலம் உட்பட மூன்று பதக்கங்களை மாத்திரம் பெற்று இரண்டாமிடத்தைச் சுவீகரித்தனர். (ற-422)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



**அமரர் மாலினி பாஸ்கரன்**

[B.Com (SL), PGD in English (SL), PGD in pub. Admin, MA in public Administration (SL)]

மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் - முல்லைத்தீவு

அன்னை மடியில்
04.01.1967

ஆண்டவன் அடியில்
09.08.2020

கடந்த 09.08.2020 சிவபதமடைந்த எமது குடும்ப குலவிளக்கு அமரர் மாலினி பாஸ்கரனுடைய வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (08.09.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற உள்ளதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலும் இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இல.50, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

கணவர் பாஸ்கரன் (அப்பன்)
மற்றும் குடும்பத்தினர்.




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.09.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.